


since 2009

நமது தளம்...

# மாற்றம்

MAATRAM

01, ஆகஸ்ட், 2020 வருகை : 05 விலை: 40.00




# 5 ஆசனங்களுக்காக 304 வேட்பாளர்கள்

# மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டி



இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சுமார் 409808 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள். இதில் 1157 கன்னி வாக்காளர்கள் இம்முறை பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். அதேபோன்று 12815 பேர் தபால் மூல வாக்காளர்களாக காணப்படுகின்றார்கள். தபால் மூல வாக்களிப்பு நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 05 ஆம் திகதி பொது வாக்களிப்பு நடைபெறவுள்ளது. அந்தவகையில் 05 ஆசனங்களை பெற்றுக்கொள்வதற்காக இம்மாவட்டத்தில் 16 அரசியல் கட்சிகளிலிருந்தும் 22 சுயேட்சை குழுக்களிலிருந்தும் சுமார் 304 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைவாக மாவட்டம் முழுவதும் 428 வாக்கெடுப்பு நிலையங்களும் 67 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கலாமதி பத்மராஜா குறிப்பிட்டார்.

## சஜித் பிரேமதாஸாவில் நம்பிக்கை வைத்து அப்துர் ரஹ்மானுக்கு வாக்களியுங்கள்

### இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வேண்டுகோள்



தற்போதைய காலகட்டத்தில் அப்துர் ரஹ்மான் போன்ற அரசியல் ஆளுமைகள் எமது தேசத்திற்கும், சமூகத்திற்கும் தேவைப்படுகின்றார்கள் நீங்கள் சந்தேகப்படாமல் உங்கள் வாக்குகளை அவருக்கு வழங்குங்கள். அவ்வாறு நீங்கள் அவருக்கு வாக்களிக்கும் போது சஜித் பிரமதாஸாவினால் வழங்கப்பட்ட வாக்குறுதியை இப்பிரதேசத்திற்கு பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் நான் உறுதுணையாக இருப்பேன் என முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் குறிப்பிட்டார். (10ம் பக்கம் பார்க்க)

## மரத்திலும் வண்ணாத்திப் பூச்சியிலும் தலா ஒரு சிங்கள வேட்பாளர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்கள், ஏனைய இனத்தவர்கள் என ஒரு வீதமானவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களின் வாக்கு வங்கியை இலக்காக கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தமது வேட்பாளர் பட்டியலில் சிங்கள வேட்பாளர்களையும் இணைத்துள்ளதை அவதானிக்கலாம். அந்தவகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் ஹேரத் முதியான்சேலாகே பிரியதர்சன சமந்த பண்டார அபேவிக்ரமவும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பில் ஹேரத் முதியான்சேலாகே வீரசேகரவும் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம்களின் சொந்த இடங்கள் கபலீகரம் செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது




மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களின் சொந்த இடங்களும் காணிகளும் கபலீகரம் செய்யப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இங்குள்ள மாவட்ட நிர்வாகிகளுக்கும் பிரதேச நிர்வாகிகளுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். என முன்னாள் ஆளுநர் கலாநிதி ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார் மட்டக்களப்பில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணிப்பிரச்சினை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் .அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,இம்மாவட்ட முஸ்லிம்கள் சொற்ப நிலங்களுக்குள்ளே வாழ்ந்து வருகின்றார்கள். திட்டமிடப்பட்ட முறையி ல்மாவட்டத்தில் உள்ள நிர்வாகிகளால் முஸ்லிம்களின் சொந்த இடங்கள் கபலீகரம் செய்யப்பட்டு வருவது நிறுத்தப்பட வேண்டும். எமது வெற்றியின் பின் இம்மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களின் காணிகளை தமிழர்களோ, தமிழர்களின் காணிகளை முஸ்லிம்களோ முறைகேடாக பயன்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முஸ்லிம்களின் சொந்த இடங்கள் கபலீகரம் செய்யப்படுவதற்கு எதிராக பேசுவதை இனவாதம் என்று சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான நிர்வாக அடக்குமுறை இடம்பெற்று வருகின்றது. கிழக்கு பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துக்கான காணி ஏறாவூர் பிரதேசத்திலிருந்து பெறப்படுள்ளது. நீண்டகாலமாக குடியிருந்து வரும் நூற்றுக்கணக்கான முஸ்லிம் குடும்பங்கள் அரச காணி என்ற முறையில் துரத்தப்படுகின்றார்கள். வர்த்தமானி வெளியீடு, வழக்குப்பதிவு போன்ற விடயங்களினால் முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டு வருகின்றார்கள். எனவேதான் குறிப்பிடுகின்றேன் எதிர்வரும் 05 ஆம் திகதிக்கு பின் இவ்வாறான செயற்பாடுகளை இங்குள்ள நிர்வாகிகள் நிறுத்த வேண்டும் என அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் தெரிவித்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

since 2020 நமது தமிழ்...
மாற்றம்
MAATRAM

Inter Media Solution PVT(Ltd)
P.O. Box: 7,Oddamavadi
Contact No: 0774565323/ 0774413648
Email: maatrampaper@gmail.com

## வாக்காளர் மீதுள்ள தார்மீகப் பொறுப்பு

இன்னும் ஒரிரு தினங்களில் 16வது பாராளுமன்றத் தேர்தலை நாம் சந்திக்கவுள்ளோம். இந்த தருணத்தில் மீண்டும் "மாற்றம்" உங்களின் பார்வைக்கு வந்துள்ளது என்பதை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். 2009 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "மாற்றம்" பத்திரிகை தனது நான்காவது வருகையுடன் சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் சிறிய இடைவெளியை ஏற்படுத்தியிருந்தது. எனவே, நடுநிலைமையுடன் செயற்பட வேண்டிய ஊடகத்தின் வெற்றிடம் சமூகப்பரப்பில் தொடர்ந்து காணப்பட்டு வருகின்றது. அந்த இடைவெளியை மாற்றம் நிரப்ப வேண்டும் என்ற ஏராளமானவர்களின் கோரிக்கைக்கமைய மாற்றம் தொடர்ந்தும் பக்கச்சார்பின்றி பயணிக்கும் என்ற நம்பிக்கையை வாசகர்களுக்கு தருகின்றோம்.

எனவே, இப்பயணத்தில் வாசகர்கள் ஆகிய நீங்கள் பூரண ஆதரவு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில் ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் மாற்றம் பயணிக்கவுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுக்குள் இருந்து பத்திரிகையை செய்வதில் உள்ள சிரமங்களை நீங்கள் அறிவீர்கள். எனவே, ஐந்தாவது இந்த வருகையில் நிறைய குறைபாடுகள் இருக்கும் அதனை வாசகர்களாகிய நீங்கள் பொருந்திக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் இவ்வெளியீடு வருகின்றது. தொடர்ச்சியாக இப்பத்திரிகையை வெளியிடுவது தொடர்பில் உங்களின் மேலான கருத்துக்களையும், விமர்சனங்களையும் மாற்றம் எதிர்பார்த்துள்ளது.

தற்போது தேர்தல் பிரசாரங்களும் செயற்பாடுகளும் சூடுபிடித்துள்ளது. அரசியற் கட்சிகளும் வேட்பாளர்களும் தங்களுடைய கொள்கைகளை தீவிரப்படுத்தி பிரசாரங்களை செய்து வருகின்றார்கள். அந்தவகையில் அமையவுள்ள பாராளுமன்றத் தேர்தல் சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு பலத்த சவாலாக அமையும் என்பதை சகலரும் தெரிவித்து வருகின்றார்கள். ஏனென்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இந்த பாராளுமன்றத்தில் பெற வேண்டுமென கடுமையான முயற்சிகளை ஆளும்தரப்பு மேற்கொண்டு வருகின்றது. நடந்த ஜனாதிபதி தேர்தலில் அமோக பெரும்பான்மை வாக்குகளை பெற்ற ஆளும்தரப்பு பொதுத்தேர்தலிலும் அதேமாதிரியான வெற்றிவாய்ப்பை பெற்று மூன்றில் இரண்டு பங்கை பெருவதற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.
சிறுபான்மை இனக்கட்சிகள் கடந்த காலங்களில் அரசாங்கத்துடன் பேரம்பேசி ஆட்சியின் பங்காளர்களாகி செயற்பட்ட நிகழ்வுகளை கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுக்கு கொண்டுவந்துள்ளதாக தோன்றுகின்றது. இதனையே பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ கூறிவருகின்றார். பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் ஒரு பலமான அரசாங்கத்தை உருவாக்க முயற்சிப்பதற்கு பின்னால் உள்ள அரசியல் நிகழ்ச்சி நிரல் தொடர்பான ஐயப்பார்வை சிறுபான்மை மக்களிடத்தில் காணப்படுகின்றது. எனவேதான் அமையவுள்ள பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவம் வெகுவாக குறைவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றது.

கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை வெகுவாக குறைத்து அந்த இடங்களுக்கு பெரும்பான்மை இனத்தவர்களை அல்லது ஆளுங்கட்சிக்கு பணிவிடை செய்யும் நபர்களை தெரிவுசெய்வதற்கான உபாயங்களை ஆளுங்கட்சி முன்னெடுத்து வருகின்றது. வடக்கு கிழக்கு மாகாணம், மேல்மாகாணம் மற்றும் மலையகம் போன்ற இடங்களில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கான உபாயங்கள் செய்யப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அந்தவகையில் தேசிய கட்சிகளின் பிரசங்கம், அதிகமான சுயேட்சைக்குழுக்களின் போட்டித்தன்மை அதேபோன்று சிறுபான்மை மக்களின் மனங்களில் இடம்பிடித்த பெரும்பான்மையினர் என்ற வகையில் ஏராளமானோர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றார்கள்.

இதனால்சிறுபான்மை மக்களின் வாக்குகளை செல்லுபடியற்ற வாக்குகளாக மாற்றி அச்சமூகத்தின் பிரதிநிதிகளை குறைப்பதுதான் இதன் பின்னாலுள்ள அரசியல் நிகழ்ச்சி நிரலாக பார்க்கப்படுகின்றது.இந்த ஆளுங்கட்சியின் உபாயங்களுக்கு ஈடான ஏற்பாடுகளை சிறுபான்மை இனக்கட்சிகள் செய்யத்தவறிவிட்டதை அவதானிக்க முடிகின்றது. அது தமிழ் கட்சிகளாக இருக்கலாம், முஸ்லிம் கட்சிகளாக இருக்கலாம் அல்லது மலையக கட்சிகளாக இருக்கலாம்.

இதனால் 16வது பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவம் குறைவடைவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாக இருக்கின்றன. சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்படும் போது சட்டசபையில் அம்மக்கள் சார்பான பிரதிநிதிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது அவ்வாறு இருந்தால் அது சிறுபான்மை சமூகத்திற்கு பாதகமாக அமையும் என்பதை உணர்ந்து தமது வாக்குகளை சிறுபான்மை மக்கள் இத்தேர்தலில் பயன்படுத்த வேண்டும்.

எனவேதான், நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் சிறுபான்மை சமூகத்திற்கு முக்கியமான தேர்தலாக காணப்படுகின்றது. மக்களுக்காக குரல்கொடுக்கின்ற பிரதிநிதிகளை தெரிவு செய்வது வாக்காளர்களின் கடமையாகவும் தேவையாகவும் உள்ளது. அதற்காக சரியான. நபர்களுக்கு தமது வாக்குகளை செலுத்த வேண்டும். பிழையான நபர்களுக்கு அல்லது அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் வாக்குகள் பெறுமதி குறைந்து பிரயோசனமற்ற வாக்குகளாக போவதை விட சாத்தியமானவர்களுக்கு வாக்குகளை வழங்கி தாம்சார்ந்த பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தார்மீகப்பொறுப்பு வாக்காளர்களுக்கு உள்ளது.

# இம்முறை ஊருக்கு எம்.பி சாத்தியப்படுமா?





-தத்ரூபன்-

தற்போதைய தேர்தல் முறைமையின் படி ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சகல பிரதேசத்திலும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. இந்த பார்வை தொடர்பான வியாக்கியானங்கள் இடம்பெற்றுவருவதையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான எண்ணப்பாடுகளால் பிரதேச வாதம் வளர்ந்து சமூகத்தின் ஒற்றுமை சீர்குழை ந்து சமூக அபிவிருத்தி என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற எண்ணப்பாடு மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான முஸ்லிம் பிரதேசங்களில் காணப்படுகின்றன. இதற்கு இம்மாவட்டத்தில் கூடுதலான, அனுபவமான முஸ்லிம் அரசியல் தலைமைகள் இருப்பதும் ஒரு காரணமாகும்.

இதனால் காத்தான்குடி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி போன்ற பிரதேசங்களில் ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இத்தேர்தலிலும் குறைந்த பாடில்லை. இதனால் ஒரு கட்சிக்குள்ளேயே முரண்பாடுகளும் பிரச்சினைகளும் வலுப்பெற்று வருவதை காணலாம். இவ்வாறான சிந்தனைகள் மாற்றமடையுமா என்று பார்த்தால் அதற்கு தேர்தல் முறையில் மாற்றங்களை செய்தாக வேண்டும். எனவே நடைமுறையில் உள்ள தேர்தல் முறையில் ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற எண்ணப்பாட்டை அகற்ற முடியாது. மட்டக்களப்பு மாவட்டத்தை பொருத்தவரையில் இங்குள்ள முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கையின் படி ஒரு ஆசனத்தை மாத்திரமே பெற முடியும்.

ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட பாராளுமன்றத்திற்கு செல்வதற்கு தகுதியான அரசியல் வாதிகள் மாவட்டத்தில் இருப்பதனால் தேர்தல் காலங்களில் ஊருக்கு எம்.பி என்ற கோசம் இப்பிரதேசங்களில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. கடந்த காலங்களில் இரண்டு முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு ஒரு முஸ்லிம் பிரதிநிதி தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்று ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை சமப்படுத்தியதை அவதானிக்கலாம். ஆனால் இம்முறை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அவ்வாறான ஏற்பாடுகள் மிகக்குறைவாக இருப்பதனால் ஊருக்கு எம்.பி என்ற கோசம் இம்மாவட்டத்தில் மேலோங்கி காணப்படுகின்றது.

அந்தவகையில், கல்குடா தொகுதியில் பிரதானமாக இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக சட்டத்தரணி கபீப் றிபானும் போட்டியிடுவதனால் ஊருக்கான எம்.பியை இம்முறை கல்குடா தொகுதி தக்கவைத்து கொள்ளுமா என்ற எதிர்பார்ப்பு இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது. இரண்டு பேரும் வெவ்வேறு அணிகளாக போட்டியிடுவதால் இங்குள்ள வாக்குகள் குறைவடைந்து எம்.பி இல்லாமல் போய்விடும் என்ற ஐயமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் இரு வேட்பாளர்களும் மற்றைய வேட்பாளரை தமது அணியில் வந்து இணைந்து ஊரின் எம்.பியை பாதுகாப்போம் என்ற வகையில் பிரச்சாரங்களை செய்து வருகின்றனர். இவ்வாறு இருவேட்பாளர்களும் ஓர் அணியில் இணையும் போது கல்குடா பிரதேசத்தின் பிரதிநிதித்துவம் தக்கவைக்கப்படும் என்ற உண்மையை அனைவரும் அறிந்து வைத்துள்ளார்கள்.எனவே இங்கு பிரச்சினை யார் யாருடன் இணைவது என்பதில்தான் உள்ளது. ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு மக்கள் வந்தால் அரசியல் கட்சிகளோ,அவற்றின் கொள்கைகளோ முதன்மைப்படுத்தப்படாது. மாறாக ஊர்தான் முதன்மைப்படுத்தப்படும். எனவே ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற இடத்திற்கு வருவதற்கு அரசியல் கட்சிகளின் அடையாளம் தேவையில்லை. எனவே ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற நோக்கத்தை அடைவதற்கு முதலாவது படியாக அரசியல் கட்சிகளின் தேவைப்பாடு இருக்காது. அடுத்து இரு வேட்பாளர்களும் பெற்றுக் கொள்ளும் வாக்குகளின் புள்ளிவிபரங்களை பகுப்பாய்வு செய்து அதில் சாத்தியப்பாடு இருவரிலும் யாருக்கு கூடுதலாக உள்ளது என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இந்த வழிமுறையில் உடன்பாடு எட்டப்படும் போது இருவரும் ஒரு அணியில் சங்கமித்து ஒருவர் மாத்திரம் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவு எட்டப்பட வேண்டும். இந்த இடத்தை அடைவதற்கு இரு வேட்பாளரும் விட்டுக் கொடுப்புக்களையும் தியாகங்களையும் செய்ய வேண்டும். அவ்வாறு செயற்படாதுவிட்டால் ஊருக்கான எம்.பி இல்லாமல் போவதற்கான முழுப்பொறுப்பையும் இரு வேட்பாளர்களுமே ஏற்க வேண்டும்.

இரு வேட்பாளர்களின் பக்கமும் சந்தேகத்திற்கு இடமான இரு அம்சங்கள் இத்தேர்தலில் காணப்படுவதை அவதானிக்கலாம். முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலிக்கு தமிழ் பிரதேசங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் வாக்குகளும் சட்டத்தரணி கபீப் றிபானுக்கு ஏறாவூரில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் பெற்றுக்கொள்ளும் விருப்பத்தெரிவிலும் சந்தேகங்கள் நிலவுவதை புரிந்து கொண்டு இந்த விடயத்தை ஆழமாக அலசி ஆராய்ந்து இரு வேட்பாளர்களும் ஒரு புள்ளியில் வரவேண்டும்.இந்த அம்சத்தில் ஊருக்கு எம்.பி வேண்டும் என்ற பொதுநோக்கில் இருவரும் உடன்பட வேண்டும். அவ்வாறான நிலைப்பாடு எட்டப்பட்டால் ஊருக்கு எம்.பி என்ற விடயத்தை இலகுவாக அடைந்து கொள்ள முடியும். அதேபோன்று விகிதாசார தேர்தல் முறையில் முதலில் கட்சி கூடுதலான வாக்குகளை பெற வேண்டும் என்ற அம்சம் காணப்படுகின்றது. எனவே ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளும் மாவட்டத்தில் பெற்றுக்கொள்ளும் எண்ணிக்கைகளின் புள்ளிவிபரங்களை பகுப்பாய்வு செய்து அந்த புள்ளிவிபரத்தில் எந்த கட்சி முன்னிலை வகிக்கின்றது அக்கட்சி சார்பான வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுவது என்ற உடன்பாட்டிற்கு இருவரும் வரவேண்டும். எனவே மேற்குறிப்பிட்டவாறு இரு வேட்பாளர்களின் வாக்குவங்கி அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் வாக்குவங்கி என்ற விடயத்தை அடைவதற்கு ஒரு சுயாதீன குழு ஒன்றை நியமிக்க வேண்டும். அக்குழுவில் இரு வேட்பாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊர் பற்று மிக்க சமூக நலன்விரும்பிகள் என்ற அடிப்படையில் சுயாதீன குழுவை நியமித்து அக்குழுவின் தீர்மானத்தில் இரு வேட்பாளர்களும் உடன்படும் போது கல்குடா பிரதிநிதித்துவம் இம்முறை தக்கவைக்கப்படும் என்பதில் எந்த சந்தேகமும் இருக்காது.இந்த சுயாதீன குழுவின் அறிக்கையை அடிப்படையாக கொண்டு இரு வேட்பாளர்களுக்கும் இடையில் பொது உடன்பாடு என்ற தலைப்பில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அரசியல், சமூக, பொருளாதார-அபிவிருத்தி போன்ற விடயங்களில் "பொது உடன்பாடுகள்" செய்யப்பட்டு அந்த உடன்பாடுகள் தேர்தலுக்கு பின்பும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான வழிமுறைமைகள் பின்பற்றப்பட்டால் கல்குடா பிரதேசத்திற்கான பிரதிநிதித்துவம் எந்தவித ஐயமுமின்றி பெற்றுக்கொள்ள முடியும்.

# ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளரின் பதவி விலகலும் புதிய தவிசாளரின் பதிவியேற்பும்



2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் ஆட்சியை அமைப்பதில் கட்சிகளுக்கிடையே முரண்பாடுகள் காணப்பட்டன. அந்தவகையில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் காணப்பட்ட 18 ஆசனங்களில் 08 ஆசனங்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பான சுயேட்சைக்குழுவும் 07 ஆசனங்களை ஐக்கிய தேசிய முன்னணி சார்பாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸூம் பெற்றிருந்தது.தலா ஒரு ஆசனம் என்ற அடிப்படையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி ஆகிய கட்சிகள் ஆசனங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் ஆட்சியமைப்பதற்கான தனிப்பெரும்பான்மை எந்தக்கட்சிக்கும் காணப்படாத நிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியானது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி ஆகிய கட்சிகளின் பங்களிப்புடன் ஆட்சியை கைப்பற்றியிருந்தது. இதனால் ஒரேயொரு ஆசனத்தைப்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு பிரதி தவிசாளர் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(10 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 பொதுத்தேர்தலும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவமும்

- நஜிமிலாஹி -



ஏழாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் ஆம் திகதி நடைபெற்றது இதனைத் தொடர்ந்து இலங்கையின் 15வது பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் அதேயாண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி இடம்பெற்றது. எட்டாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்றது இதனைத் தொடர்ந்து 16வது பாராளுமன்றத்துக்கான உறுப்பினர்களை தெரிவு செய்யும் தேர்தல் 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இம்முறை 2019 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே தேர்தல் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இதற்கமைவாக ஒரு கோடி 62 இலட்சத்து 63 ஆயிரத்து 889 வாக்காளர்கள் (16263889) இம்முறை பொதுத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளார்கள். இதில் கடந்த வருடத்தை விடவும் இம்முறை 271789 பேர் கன்னி வாக்காளர்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளார்கள். 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து 196 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்கமைவாக 7452 வேட்பாளர்கள் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 05 ஆசனங்களுக்காக 16 அரசியற்கட்சிகளிலிருந்தும் 22 சுயேட்சைக்குழுக்களிலிருந்தும் சுமார் 305 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இம்முறை பொதுத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 753037 பேர் விண்ணப்பித்து இருந்தும் அதில் 47430 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு 705085 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்கான தபால் மூல வாக்களிப்பு ஜூலை மாதம் 14,15,16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. அரச ஊழியர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்க ஜூலை மாதம் 14,15 ஆம் திகதிகளில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதேபோல் பிரதேச செயலகங்கள், தேர்தல்கள் செயலகம், பொலிஸார், இராணுவம், சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் சுகாதார பிரிவினர் ஆகியோர் வாக்களிப்பதற்காக ஜூலை 16ஆம், 17ஆம் திகதிகள் ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த நாட்களில் தபால் மூலம் வாக்களிக்க தவறும் அரச ஊழியர்களுக்கு ஜூலை மாதம் 20,21 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு இலட்சத்தி தொல்லாயிரத்தி எண்ணூற்றி எட்டு (409808) வாக்காளர்கள் காணப்படுகின்றார்கள். இம்மாவட்டத்தில் 1157 கன்னி வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளார்கள். இந்த கன்னி வாக்காளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களில் எவ் வாறான வாக்களிப்பு வீதம் இடம்பெரும் எந்தெந்த அரசியல் கட்சிகள் வெற்றியடையும் கட்சிகளுக்கிடையிலான ஆசன பங்கீடு எவ்வாறு அமையும் வேட்பாளர்களின் நிலைமை எப்படி உள்ளது, கட்சிகளுக்கிடையிலான ஆசன பங்கீடு எவ்வாறுஅமையும் என்பது தொடர்பான விபரங்களை இக்கட்டுரையில் வாசகர்களுக்கு வழங்கி அதன் மூலம் தங்களது ஜனநாயக உரிமைகளை மக்கள் பிரயோகிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் மூன்று தேர்தல் தொகுதிகளை கொண்டுள்ளது. மட்டக்களப்பு தேர்தல் தொகுதியிலிருந்து ஒரு இலட்சத்தி தொன்னூற்றி இரண்டாயிரத்தி என்னூற்றி ஒன்பது (192809) வாக்காளர்களும் கல்குடா தேர்தல் தொகுதியில் ஒரு இலட்சத்தி பத்தொன்பதாயிரத்தி தொல்லாயிரத்தி இருபத்தியெட்டு (119928) பேரும் பட்டிருப்பு தேர்தல் தொகுதியிலிருந்து தொன்னூற்று ஏழாயிரத்தி எழுபத்தியொறு (97071) பேருமாக காணப்படுகின்றார்கள். இதனை இன ரீதியாக அவதானித்தால் 74 வீதமான தமிழர்கள் காணப்படுகின்றார்கள். அந்தவகையில் 311078 தமிழ் வாக்காளர்களும் 25 வீதமான முஸ்லிம் மக்களை கொண்ட 94469 வாக்காளர்களும் காணப்படும் அதேவேளை ஏனைய இனங்களிலிருந்து 4261 பேர் வாக்களிக்க தகுதி பெற்றவர்களாக காணப்படுகின்றார்கள்.

**"கட்சியின் பங்களிப்பும் அபேட்சகரின் செல்வாக்கும்" என்ற இந்த இரண்டு அம்சத்திலும் யார் முன்னணி வகிக்கின்றாரோ அவர்தான் மட்டக்களப்பில் தெரிவாகும் முஸ்லிம் பிரதிநிதியாக திகழ்வார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் 94469 முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கையை பிரதேச ரீதியாக அவதானித்தால் காத்தான்குடி பிரதேசத்திலிருந்து 31268 வாக்காளர்களும் ஏறாவூர் பிரதேசத்திலிருந்து 26463 வாக்காளர்களும் கோறளைப்பற்று மத்தி முஸ்லிம் பிரதேசத்திலிருந்து 19984 வாக்காளர்களும் கோறளைப்பற்று மேற்கு பிரதேசத்திலிருந்து 16754 பேரும் வாக்காளர்களாக காணப்படுகின்றார்கள். கோறளைப்பற்று மத்தி மற்றும் கோறளைப்பற்று மேற்கு ஆகிய இரு பிரதேசங்களும் தொடரான நிலத்தொடர்புகளை கொண்டுள்ள பிரதேசம் என்பதால் இங்கு 36738 அதி கூடிய முஸ்லிம் வாக்காளர்கள் காணப்படுவது விசேட அம்சமாகும். 2020 பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு பிரதானமான அரசியற் கட்சிகள் களத்தில் குதித்திருந்தாலும் ஆறு கட்சிகளுக்கிடையில் பலத்த போட்டி நிகழும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செல்வாக்கை நாம் அவதானிப்போமாயின்.

**தமிழ் தேசிய கூட்டமைப்பு :** இக்கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்கு வங்கியில் முதன்மையான இடத்தைப்பிடித்துவரும் கட்சியாக காணப்படுகின்றது. கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது 66235 வாக்குகளை பெற்று ஒரு போனஸ் ஆசனம் அடங்களாக 3 பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றியிருந்தது. [illegible] மைப்பு மட்டக்களப்பு [illegible] குறைவான வாக்குகளாக இந்த வாக்குப்பதிவே இடம் பெற்றிருந்தாலும் 4226 மேலதிக வாக்குகளினால் மாவட்டத்தில் முதலாம் இடத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு தக்கவைத்துக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து 2015இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் இக்கட்சி 127185 வாக்குகளைப் பெற்று மீண்டும் ஒரு போனஸ் ஆசனம் அடங்களாக 3 ஆசனங்களை கைப்பற்றிக்கொண்டது. 2010ஐ விட 2015ஆம் ஆண்டு 60950 ஆயிரம் வாக்குகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு மேலதிகமாக பெற்றிருந்தது. 2020 இல் நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்கு வங்கி எப்படி அமையும் என்பதை கடந்தகால தேர்தல் முடிவுகளை வைத்து இதற்கான பதிலையும் இலகுவாக கண்டுபிடித்துவிடலாம்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகள் போட்டியிடுவதால் 2015 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட வாக்கில் சுமார் 35000 – 50000 வரையான வாக்குகள் குறைவடைந்தாலும் 75000 க்கும் அதிகப்படியான வாக்குகளை தமிழ் தேசியக்கூட்டமைப்பு பெற்றுக்கொண்டு மாவட்டத்தில் கூடிய வாக்குகளை பெறும் கட்சியாக தமிழ் தேசிய கூட்டமைப்பை நாம் அடையாளப்படுத்த முடியும்.

**ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் :**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 94469 முஸ்லிம் வாக்காளர்கள் காணப்படுகின்றார்கள். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த 2010 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிட்டு 22935 வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் மூன்றாவது இடத்தைப்பிடித்து ஒரு ஆசனத்தை கைப்பற்றியது. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 38477 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை கைப்பற்றி மாவட்டத்தில் இரண்டாம் நிலையில் காணப்பட்டது.

நடைபெறவுள்ள 2020 பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாவது இடத்தை பிடிக்குமா? மூன்றாவது இடத்தைப்பிடிக்குமா? அல்லது ஆசனத்தை பெறாமல் தோல்வியை தழுவுமா என்ற வாதப்பிரதிவாதம் இடம்பெற்றுக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். கடந்த 2015 பொதுத்தேர்தலிலும் 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் முஸ்லிம் காங்கிரஸின் வாக்கு வங்கி வளர்ச்சியடைந்திருந்தாலும் இம்முறை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஆகிய கட்சிகளை முந்திக்கொண்டு ஆசனத்தைப்பெற வேண்டியுள்ளது.

**தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் :** 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி 16886 வாக்குகளை பெற்றிருந்தது. 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இக்கட்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் 60000 க்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றிருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 53 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை பெற்றுக்கொண்ட கட்சியாகவும் கோறளைப்பற்று பிரதேச சபையில் தனது ஆட்சியை நிலைநாட்டிய கட்சியாகவும் திகழ்கின்றது. இந்த வாக்கதிகரிப்பின் படி நடைபெறவுள்ள தேர்தலிலும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி செல்வாக்கு செலுத்தினர். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அடுத்தபடியாக கூடுதலான வாக்குகளை பெரும்கட்சியாகவும் தனக்கான ஒரு ஆசனத்தை தக்கவைக்கும் கட்சியாகவும் அது திகழும்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண ஆகிய இரு கட்சிகளிலும் அரசாங்க சார்புடையதாக காணப்படுகின்றது. இவ்விரு கட்சிகளுக்குமிடையே கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரச்சினைகளும் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ள நிலையையும் நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. எனவே, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் குறிப்பிட்ட வாக்குகள் பொதுஜன பெரமுணவுக்கு அளிக்கப்படுமாக இருந்தால் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் வெற்றிவாய்ப்பு குறைந்தளவிலே காணப்படும் என்பதை நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**ஐக்கிய மக்கள் சக்தி :**
ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸா, முன்னாள் இராஜங்க அமைச்சர் அமீர் அலி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைவர் அப்துர் ரஹ்மான் ஆகிய கதாபாத்திரங்களின் பங்களிப்பு முக்கியமானதாக காணப்படுகின்றது. சஜித் பிரமதாசாவுக்காக அவர் முன்னெடுத்த வீடமைப்புத்திட்டம் போன்றவற்றை முன்நிலைப்படுத்தியே ஐக்கிய மக்கள் சக்திக்கான வாக்கு வங்கியின் கோரிக்கை அமைகின்றது. இங்கு எதிர்பார்க்கப்படும் தமிழ் மக்களின் வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைத்தால் மூன்றாவது சந்தர்ப்பத்தை ஐக்கிய மக்கள் சக்தி பெற்றுக்கொண்டு ஏனைய கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி, மற்றும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் தோல்வியடையும் நிலை ஏற்படும்.

**ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு :** ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற தவிசாளர் பஸீர் சேகுதாவூத் மற்றும் செயலாளர் நாயகம் ஹஸன் அலி ஆகியோரின் பங்களிப்புடன் 2017 இல் இக்கட்சி உருவாக்கப்பட்டது. நடைபெறவுள்ள 2020 பொதுத்தேர்தலில் இக்கட்சி கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் என்ற அரசியல் ஆளுமையுடன் இணைந்து போட்டியிட உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கட்சி வெற்றி வாய்பை நாம் அவதானித்தால் காலாநிதி ஹிஸ்புல்லாஹ் மாவட்டத்தில் (10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிநிதித்துவ அரசியல் முறைமையில் இலங்கை முஸ்லிம்களின் வகிபாகம்

ஸயீத் அஸ்ஹர் - அக்குரனை

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கைக்கும் முஸ்லிம்களுக்குமுள்ள தொடர்பு ஆயிரம் வருடங்கள் பழைமை வாய்ந்தது. வணிகர்களாக வந்த அரேபியர் வழியாக இந்த நாட்டில் இஸ்லாம் வேறூன்றியது. அப்படி வருகை தந்த இந்த முஸ்லிம்கள் பண்டைய கால மன்னர்களின் மருத்துவர்களாகவும், பணியாளர்களாகவும், அமைச்சர்களாகவும், தூதுவர்களாகவும் செயற்பட்டுள்ளனர். தொன்மையான இந்த வரலாற்றுத் தொடரில் 1800களின் பின்னர் மெல்ல மெல்ல ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்த இலங்கையில் முஸ்லிம்களது அரசியல் செயற்பாடுகள் பற்றி இந்த கட்டுரை ஆராய்கின்றது.

## சுதந்திரத்திற்கு முற்பட்ட கால பிரதிநிதித்துவ முறை

1833ம் ஆண்டு இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்ட கோல்ஜீரூக் கமரன் சீர்திருத்தம் தான் இலங்கையின் பிரதிநிதித்துவ அரசியலின் முதல் படியாக அமைந்தது. ஆளுனரால் நியமிக்கப்பட்ட 16 அங்கத்தவர்களைக் கொண்டிருந்த சட்ட சபையில் 1889ஆம் ஆண்டு வரை முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. காரணம் அதுவரை முஸ்லிம்கள் தமிழர்களோடு இணைத்தே பார்க்கப்பட்டனர். 1889ம் ஆண்டே கண்டிய சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் தலா ஒரு பிரதிநிதி வழங்கப்பட்டது. அந்தவகையில் "முகம்மது காஸீம் அப்துர்ரஹ்மான்ஜீ முதல் முஸ்லிம் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். பிற்காலத்தில் வந்த என்.எச்.எம். அப்துல் காதர் என்ற திறமையான நபர் இனவாரியான தேர்தல் முறையில் "முகம்மதியர் தொகுதியின் அவசியத்தை வலியுறுத்தினார். அதனடிப்படையில் 1924ஆம் ஆண்டு முகம்மதியருக்கான தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டு மாக்கான் மாக்கார், அப்துல் காதர், டி.பி. ஜாயா ஆகியோர் சட்ட சபைக்கு தெரிவானவர்கள். அதே போல் இந்திய தொகுதியில் சுல்தான் என்பவரும் நியமன அடிப்படையில் ஆதம் அலி என்பவரும் பதவி வலியாக செலிஸிட்டர் ஜெனரலாக கடமையாற்றி எம்.பி.அஸ்வர் என்பவரும் சட்ட சபைக்குத் தெரிவாகினர்.

1833ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த கோல்புரூக் யாப்பு 1910 குருமெக்கலம் சீர்திருத்தம், 1920 மெனிங், 1924 மெனிங் டிவய்சியர் சீர்திருத்தம் என்பவற்றிற்கு உள்ளாகி 1930 வரை ஒரு நூற்றாண்டு காலம் நின்று நீடித்தது. 1930ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. இதுவரை இருந்த சட்டவாக்க சபை, சட்ட நிர்வாக சபை என்பன நீக்கப்பட்டு அரசாங்க சபை நிறுவப்பட்டது. விசேடமாக சர்வசன வாக்குரிமை இதன் மூலமே அறிமுகப்படுத்தப்பட்டது. இனவாரி பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட்டு 50 தொகுதிகளாக நாடு பிரிக்கப்பட்டு தொகுதிவாரி பிரதிநிதித்துவ முறை ஆரம்பிக்கப்பட்டது. எட்டுப்பேர் ஆளுனரால் நியமிக்கப்பட்டதோடு மூன்று செயலாளர்களையும் கொண்டு மொத்தமாக 61 உறுப்பினர்களைக் கொண்டதாக இது அமைந்திருந்தது.1931இல் நடைபெற்ற தேர்தலில் முஸ்லிம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். மாக்கான் மாக்காரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டார். அவர் போக்குவரத்து அமைச்சராகவும் செயற்பட்டார். 1936ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் துரதிஷ்டவசமாக எந்த தொகுதியிலும் வெற்றி பெற முடியவில்லை என்ற போதிலும் நியமன அடிப்படையில் சேர் ராசிக் பரீட், டி.பி.ஜாயா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். 1942ம் ஆண்டு கொழும்பு மத்திக்கு நடந்த இடைத் தேர்தலில் எம்.சீ.எம்.கலீல் என்பவர் தெரிவு செய்யப்பட்டார் இருந்த போதும் இவர்களில் யாரும் அமைச்சர்களாக செயற்படும் வாய்ப்பு கிடைக்கவில்லை. எனினும் இலங்கையின் கல்வி அமைச்சராக சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கராவை தலைமையாகக் கொண்ட நிர்வாகக் குழுவான கல்விக் குழுவில் ராசிக் பரீத்,டி.பி.ஜாயா என்போர் அங்கத்தினராய் இருந்த காரணத்தினால் முஸ்லிம்களின் கல்வித்துறையை மேம்படுத்த முடிந்தது.

## சுதந்திரத்திற்கு பின்னரான பிரதிநிதித்துவ முறை

1935ம் ஆண்டிக்குப் பின் இலங்கை கட்சி அரசியலில் காலடி எடுத்து வைத்தது. 1947ம் ஆண்டு இலங்கைக்கு கட்சியை வழங்கிய சோல்பரி யாப்பின் கீழே கட்சி அடிப்படையில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இம்முறையில் பாராளுமன்றம் இரு அவைகளைக் கொண்டிருந்தது. சனப் பிரதிநிதிகள் சபை, செனட் சபை என்பவையே அவையாகும். இதில் சனப் பிரதிநிதிகள் சபையில் 89 தொகுதிகளில் 95 பேர் தெரிவு செய்யப்பட்டனர். நான்கு இரு அங்கத்தவர் தொகுதிகளும் ஒரு மூன்றங்கத்தவர் தொகுதியும் உருவாக்கப்பட்டது.1946ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐ.தே.க துணைத் தலைவராக டி,பி.ஜாயா செயற்பட்டார்.1947இல் நடைபெற்ற தேர்தலில் 06 முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். 1950இல் நடைபெற்ற மாஸ்கெலிய இடைத்தேர்தலில் ஏ.அஸீஸ் வெற்றி பெற்றார்.டி.பி.ஜாயா சிலகாலம் தொழில் அமைச்சராக கடமையாற்றினார். பின் இவர் பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்படவே அவரது வெற்றிடத்திற்கு நடந்த இடைத் தேர்தல் மூலம் எம்.சீ.எம்.கலீல் வெற்றி பெற்றார். அதேநேரம் பாராளுமன்ற எட்டு காரியதரிசிகளில் இரண்டு பேரும், செனட் சபையில் சனப்பிரதிநிதிகள் மூலம் நான்கு பேரும் ஆளுனர் மூலம் ஆறு பேருமாக பத்து செனட்டர்கள் அங்கம் வகித்தனர். 1952ம் ஆண்டு இடம்பெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு டட்லி சேனாநாயக்க தலைமை வகித்தார். ஐ.தே.கட்சியை விட்டு பிரிந்து எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை [illegible] இத்தேர்தலில் [illegible] பேரும், சுதந்திக்கட்சி சார்பில் ஒருவரும், சுயேட்சையாக மூன்று பேரும் என ஏழு முஸ்லிம்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். மொத்தமாக இப்பாராளுமன்றத்துக்கு 95 பேர் தேர்தல் மூலமும் 06 பேர் நியமன முறையிலுமாக மொத்தம் 101 உறுப்பினர்களை கொண்டதாக அச்சபை காணப்பட்டது.





எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடைபெறவுள்ள 16வது பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம்களின் பிரதிநித்துவத்துக்கு ஒரு சவாலான பாராளுமன்றமாகவே இருக்கப்போகின்றது

1956ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதமராக பதவி ஏற்றார். இப்பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் மூவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஒருவரும் சமஸ்டி சார்பில் இருவரும், சுயேட்சையாக ஒருவரும்,நியமன அடிப்படையில் ஒருவரும் என 08 முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் சி.ஏ.எஸ்.மரிக்கார் தபால் ஒலிபரப்பு மற்றும் தகவல்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். பண்டார நாயக்கா கொலை செய்யப்பட்ட பின்னர் பிரதமராக டபிள்யூ. தஹா நாயக்கவின் அமைச்சரவையில் எம். எம். முஸ்தபா நிதி அமைச்சராகவும், ராசிக் பரீட் வாணிப மற்றும் வர்த்தக அமைச்சராகவும் மரைக்கார் தபால் அமைச்சராகவும், எம்.எஸ்.காரியப்பர் கலா சார அலுவல்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சராகவும் பதவிவகித்தனர்.

1960ஆம் ஆண்டு ஜனவரி 04ஆம் திகதி 145 தொகுதிகளில் 151 உறுப்பினர்களை தெரிவு செய்யப்படுவதற்காக நடைபெற்ற தேர்தலில் 12 முஸ்லிம்கள் தெரிவாகினார்கள். இவர்களில் எம்.ஸீ.எம்.கலீல் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதே வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றியீட்டியது. 21.07.1960இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் மனைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உலகில் முதல் பெண் பிரதமர் எனும் பெருமையுடன் ஆட்சிபீடம் ஏறினார். இத்தேர்தலில் 14 பேர் முஸ்லிம் சமூகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். இதில் 11 பேர் தேர்தல் மூலமும் ஏனைய 03 பேர் நியமன அடிப்படையிலும் தெரிவானார்கள். நியமன அடிப்படையில் தெரிவானவர்களில்பதியுத்தீன் மஹ்மூத் கல்வி அமைச்சராக பொறுப்பேற்ற அவர் 1963இல் சுகாதார வீடமைப்பு அமைச்சராகவும் பதவி ஏற்றுக் கொண்டார். இவரது காலத்தில் முஸ்லிம்களது கல்வித்துறை கணிசமான முன்னேற்றம் கண்டது. 1965ம் ஆண்டு நடைபெற்ற 06 வது பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தது. இப்பாராளுமன்றத்தில் முஸ்லிம் [illegible]ராக 11 பேர் தேர்தல் மூலமும், 03 பேர் நியமன அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் எம்.எச். முகம்மத் தொழில்வாய்ப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற 7வது பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அமோக வெற்றி அடைந்தது. இதில் 10 முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டனர். 08 பேர் தேர்தலிலும் இருவர் நியமன அடிப்படையிலும் தெரிவானார்கள். இதில் பதியுத்தீன் மஹ்மூத் மீளவும் கல்வி அமைச்சராக பதவியேற்றார். 1977 இல் நடைபெற்ற தேர்தலில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அமோக வெற்றி பெற்றது. 1982இல் இதன் காலம் முடிவடைந்திருக்க வேண்டும் எனினும் பொதுசன அபிப்பிராயத்தின் படி 1989 ஆண்டு வரை ஆயட்காலம் நீடிக்கப்பட்டது. இதில் 16 பேர் முஸ்லிம்களாக இருந்தனர் ஏ.சி.எஸ்.ஹமீத், எம்.எச். முகம்மத், பாக்கீர் மாக்கார் மற்றும் நெய்னா மரைக்கார் ஆகிய நால்வரும் அமைச்சர்களாக தெரிவு செய்யப்பட்டனர். 1978ம் ஆண்டு இலங்கையில் 2ம் குடியரசு யாப்பு அமுல்படுத்தப்பட்டு ஜனாபதி முறைமையை நோக்கி நாடு நகர்ந்தது.

1989ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்று பிரேமதாச பிரதமரானார். இப்பாராளுமன்றத்தில் தேசியபட்டியல் மூலமும் தேர்தல் மூலமும், வெற்றிடங்களின் போதான நியமனம் என்ற அடிப்படையிலும் 16 முஸ்லிம்கள் அங்கத்துவம் வகித்தனர். தேசிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட ஆறு பேரில் அதில் ராமித் என்பவர் ராஜினாமா செய்ய சம்சுதீன் என்பவர் அவ்விடத்தை நிரப்பினார். இவர்களுள் ஏ.சி.எஸ்.ஹமீத் உயர்கல்வி, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சராகவும், நீதி,உயர்கல்வி அமைச்சராகவும் வெளிவிவகார அமைச்சராகவும் மாறிமாறி பதவி வகித்தார். ஏ.ஆர்.மன்சூர் வர்த்தக அமைச்சராகவும் செயற்பட்டார். அதேவேளை ஐந்து பேர் இராஜாங்க அமைச்சர்களாகவும் இருந்தனர். இத்தேர்தலிலே முஸ்லிம்களின் தனித்துவ கட்சி ஒன்று பாராளுமன்றத்தில் அங்கம் பெற்றது இலங்கை அரசியலில் முதல் தடவையாகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூன்று உறுப்பினர்களையும் ஒரு தேசிய பட்டியல் உறுப்பினர்களையும் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிட்டு காட்ட வேண்டிய விடயமாகும்.1994 இல் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியை தழுவியது. அத்தேர்தலில் மூன்றாவது பெரும் கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்றம் வளர்ச்சியடைந்தது. சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரத்துங்க பிரதமரானார்.

1994 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரத்துங்க வெற்றி பெற்று ஜனாதிபதி பதவி ஏற்கவே அவரது தாய் சிறிமாவோ பண்டாரநாயக்க நான்காவது தடவையாகவும் பிரதமரானார். இத்தேர்தலில் 16 முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாற்றம்

# தொல்பொருள் ஆராய்ச்சிக்கான ஜனாதிபதியின் செயலணியும்

## சிறுபான்மை மக்களின் எதிர்கால இருப்பும்

வரலாற்று மூலாதாரங்களை இருவகைப்படுத்தலாம் இலக்கிய மூலாதாரம் மற்றும் தொல்பொருள் மூலாதாரம் என்பவை அவையாகும். ஒரு சமூகத்தின் இருப்பை நிரூபிப்பதற்காக கடந்த காலத்தில் அச்சமூகத்தின் முன்னோர்களின் பயன்பாட்டில் காணப்பட்ட விடயங்களாக இலக்கியம் மற்றும் தொல்பொருள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றது.

இங்கு தொல்பொருள் ஆய்வே இக்கட்டுரையின் பேசுபொருளாக இருப்பதனால் தொல்பொருள் என்றால் என்ன என்பது பற்றிய ஒரு சிறிய வரைவிலக்கணத்தைப் பார்ப்போம்.

தொல்லியல் என்பது மனிதன் விட்டுச் சென்ற தொல் எச்சங்களை ஆய்வு செய்து பண்பாட்டை அறிந்து கொள்வது என்று பொருள்கொள்ளப்படுகின்றது. தொல்லியல் என்ற பதம் கிரேக்க சொல்லில் இருந்து பெறப்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அந்தவகையில் கிரேக்கச் சொல்லான "ஆர்க்பபியாலஜி" என்ற சொல்லின் மூலம் தொல்பொருளியல் என்ற வார்த்தை பெறப்பட்டது. இதன்படி "ஆர்காய்ஸ" என்ற பதம் பழமை என்றும் "லோகோஸ்" என்ற வார்த்தை அறிவியல் என்றும் வழங்கப்படுவதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். நம்முடைய முன்னய சமுதாயங்கள் விட்டுச் சென்ற தடயங்கள் மூலம் பண்டைய வரலாற்றை மறுபதிவு செய்வதால் தொல்லியல் ஆய்வு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இதன்படி கிடைக்கின்ற பலம்பொருட்களைக் கொண்டு மனிதனின் பண்பாட்டை ஆய்வு செய்து வரலாற்றுக்கு மற்றுமொரு ஆய்வு நெறியினைத் தொல்லியல் கொடுக்கின்றது என்று சுருக்கமாக தொல்லியலை வரைவிலக்கனப்படுத்த முடியும்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சுமார் 2000 க்கும் மேற்பட்ட தொல்பொருள் ஆய்வுகளை நடாத்த வேண்டிய இடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எல்லாவ மேதானந்த தேரர் கடந்த காலங்களில் குறிப்பிட்டு வந்தார். அந்த வகையில் அண்மையில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பௌத்தமகா சங்கத்தின் ஆலோசனைக் குழு கலந்துரையாடல் ஒன்றில் கிழக்கு மாகாணத்திலுள்ள பௌத்த தொல்பொருள்களை ஆய்வு செய்வதற்காக கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் ஆராய்ச்சிக்கு 11 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியொன்று நியமிக்கப்பட்டது. தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் இக்குழுவில் இடம் பெறவில்லை. இதனால் இந்த செயலணி தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் பௌத்த அடையாளத்தை திடப்படுத்தி அதன் மூலம் பெரும்பான்மை இனத்தின் ஆதிக்கத்தை மேலோங்கச் செய்யும் பௌத்த அரசியல் நிகழ்ச்சி நிரலா இந்த செயலணி என்ற கேள்வி கிழக்கு மக்களிடம் காணப்படுகின்றுது.

இந்த வகையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவை அவதானிப்போமாயின் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான பிரதான மத குருவான எல்லவால மேதானந்தா தேரர், பனமுரே திலகவன்ஸா தேரர், மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன (பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்), டாக்டர் சேனரத் பண்டாரா திசாநாயக்க (தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர்), செல்வி சந்திரா ஹெரத் (காணி ஆணையாளர்), செல்வி ஏ.எல்.எஸ்.சி. பெரேரா (பிரதம நில அளவையாளர்) பேராசிரியர் ராஜ்குமார் சோமதேவா (சிரேஷ்ட விரிவுரையாளர் களனி பல்கலைக்கழகம்), பேராசிரியர் கபில குணவர்தன (மருத்துவ பீடம் - பேராதெனிய பல்கலைக்கழகம்), தேசபண்டு தென்னகோன் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், எச்.இ.எம்.டபிள்யூ.ஜி. திசனாநாயக்க (கிழக்கு மாகாண காணி ஆணையாளர்) மற்றும் திலித் ஜெயவீரா (பணிப்பாளர் - தெரன ஊடக வலையமைப்பு) ஆகிய 11 பேருமே ஜனாதிபதி செயலணியில் உள்ளடக்கப்பட்டுள்ள உறுப்பினர்களாகும்.

கடந்த காலங்களில் பெரும்பான்மை மக்கள் மத்தியில் முஸ்லிம்களை இலக்கு வைத்து மேற்கொண்ட இனவாத பிரசாரத்தில் தெரண ஊடக வலையமைப்பு பாரியபங்கை வகித்திருந்தது. குறிப்பிட்ட ஊடகங்களின் போக்கை தேர்தல் ஆணையாளர் கூட கடுமையாக விமர்சித்திருந்தார். இந்நிலையில் இந்த 11 பேர் கொண்ட செயலணியில் தெரண ஊடக வலையமைப்பின் பணிப்பாளரான திலித் ஜெயவீரா நியமிக்கப்பட்டுள்ளமை முஸ்லிம்கள் மத்தியில் மேலும்











-நஜிமிலாஹி-

**2019 ஆம் ஆண்டு மைத்திரி- ரணில் அரசாங்கம் பதவியில் இருந்தபோது இலங்கைத் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் வடக்குக் கிழக்கில் ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, துறைசார்ந்த தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகளையும் உள்வாங்க வேண்டுமெனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது அந்த தீர்மானம் புதிய அரசாங்கத்தின் வரவோடு காணாமல் போய்விட்டது.**

சந்தேகத்தை வலுப்பெறச்செய்துள்ளது. எவ்வாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதலை வைத்து ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பயங்கரவாதிகளாக சித்தரிக்க முற்பட்டார்களோ அவ்வாறான ஒரு நிலைப்பாட்டை இதிலும் ஏற்படுத்தி கிழக்கில் பௌத்த தொல்பொருள்களை அழித்த அல்லது மறைத்த செயற்பாடுகளை முஸ்லிம்கள்தான் முன்னெடுத்துள்ளார்கள் என்ற விசமத்தனமான பிரசாரம் மேற்கொள்ளப்படுமோ என்ற ஐயம் திலித் ஜெயவீரவின் நியமனம் மூலம் முஸ்லிம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று கடந்த காலங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் தமிழ் மக்களின் காணிகளும் வழிபாட்டுத்தளங்களும் அழிக்கப்பட்டு அதற்கு பதிலாக சிங்கள குடியேற்றங்களும், விகாரைகளும் உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியாக இந்த கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் ஆராய்ச்சி ஜனாதிபதி செயலணியின் நியமனம் என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது. மேற்படி செயலணியின் செயற்பாடுகள் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக எண்ணத்தோன்றுகின்றது. கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி பொத்துவில் பிரதேசத்தில் அமைந்துள்ள முஹூது விகாரையை சுற்றியுள்ள சுமார் 72 ஏக்கர் காணிகளை நில அளவை செய்வதற்காக பெருமளவான இராணுவ மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் தொல்பொருள் திணைக்களம் ஆய்வுகளை மேற்கொள்ள சென்றிருந்தது.

இதனால் குறிப்பிட்ட பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதற்றம் நிலவியதை அவதானிக்க முடிந்தது. கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொள்ளும் இந்த ஜனாதிபதி செயலணியில் பாதுகாப்பு செயலாளர் மற்றும் சிரேஷ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் ஆகியோர் நியமிக்கப்பட்டதன் பின்புலத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பொத்துவில் முஹூது விகாரை சம்பவம் தெளிவுபடுத்தியதை காணக்கூடியதாக இருந்தது. அதாவது இராணுவ, பொலிஸாரைக் கொண்டு குறிப்பிட்ட பிரதேசம் பலப்படுத்தப்பட்டு பொதுமக்களை கட்டுப்படுத்தும் வகையில்தான் தொல்பொருள் திணைக்களத்தின் முன்னெடுப்புக்கள் அங்கு மேற்கொள்ளப்பட்டது இவ்வாறான வழிமுறைமைகள்தான் ஏனைய பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படும் என்பதை இச்சம்பவத்தின் மூலம் நாம் எதிர்வுகூறக்கூடியதாகவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஹூது விகாரைக்கு பல தசாப்தகால வரலாறு இருப்பதை மறைக்கமுடியாது. 1000 வருடங்களுக்கு முன்னர் இந்த விகாரை கட்டப்பட்டதாக பௌத்த வரலாற்றில் காணக்கூடியதாகவுள்ளது. 1951 ஆம் ஆண்டு இந்த முஹூது விகாரை தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்டு இவ்விகாரையை சுற்றியுள்ள 72 ஏக்கர் காணிகள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்ற வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. இதனால் அவ்விகாரையை சுற்றியுள்ள முஸ்லிம் குடும்பங்கள் தங்களது குடியிருப்புக்களை இழக்க வேண்டிய நிலை அப்போது ஏற்பட்டது இதனால் 100 வருடங்களுக்கு மேல் இவ்விகாரையை அண்மித்து வாழ்ந்து வரும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அப்போது பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. இதனால் 1951 ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி மீள்பரிசீலனை செய்யப்பட்டு 4 வருடங்களின் பின் மீண்டும் ஒரு வர்த்தமானி வெளியிடப்பட்டு அதில் 30 ஏக்கர் காணி தொல்பொருள் திணைக்களத்துக்கு உட்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி விஜயம் செய்த தொல்பொருள் திணைக்களம் 72 ஏக்கர் காணியை அளக்க முற்பட்டபோதுதான் மக்கள் அதற்கு எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். 72 ஏக்கர் காணி அளக்கப்பட்டால் பல வருடங்களாக வாழ்ந்து வரும் சுமார் 300 குடும்பங்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற ஐயம் தற்போது பொத்துவிலில் ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள காணிகளுக்குள் தொல்பொருட்கள் மறைந்து கிடக்கின்றன அதனை பாதுகாப்பதே தமது நோக்கம் மாறாக இங்குள்ள முஸ்லிம்களை இங்கிருந்து அகற்றுவது எங்களது நோக்கமல்ல அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் முஸ்லிம்களுக்காக நானும் அவர்களுடன் இணைந்து போராடுவேன் என தற்போதைய முஹூது விகாரையின் விகாராதிபதி வரகாபொல இந்துஸ்ரீ தேரர் குறிப்பிட்டுள்ளமை முஸ்லிம்களுக்கு மன ஆறுதலை ஏற்படுத்தினாலும் இதன் பின்னணி தொடர்பில் முஸ்லிம்களிடம் தொடர்ந்தும் அச்சம் நிலவி வருகின்றது. இதற்கிடையில் தேர்தல் முடியும் வரையும் தொல்பொருள் ஆராய்ச்சியை நிறுத்துமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து இவ்விடயம் தேர்தல் முடியும்வரையும் பிற்போடப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்துக்கு உட்பட்ட வேத்துச்சேனை என்ற பிரதேசத்திற்கு ஒரு பௌத்த பிக்கு சென்று அங்கு பௌத்த தொல்பொருள் சின்னங்கள் இருப்பதாகவும் அதனை ஆய்வு செய்துவிட்டு சென்றதாகவும் தகவல்கள் வெளியாகிய நிலையில் அவ்விடத்தை அண்மித்த மக்கள் வந்து போன பௌத்த பிக்குவின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்த ஒரு நிகழ்வும் ஓரிரு தினங்களுக்கு முன்பு இடம்பெற்றிருந்தது.

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களுக்கு சேவை செய்ய இரண்டு பாராளுமன்ற ஆயுட்காலம் போதும்

நேர்காணல் : நஜிமிலாஹி- எப்.ஏ.எம்.றிபாஸ்

> அரசியல் செய்வதற்கு வயதையோ, அனுபவத்தையோ விட திறமையும், புத்திசாலித்தனமும்தான் தேவையென்று நினைக்கின்றேன். இரண்டு பாராளுமன்ற ஆயுட்காலத்தில் அம்மக்களுக்கு திருப்தியான சேவையை வழங்கமுடியும் என்ற அடிப்படையில்தான் அப்பதவிக்கான விசேட ஏற்பாடுகள் இலங்கை அரசியலில் செய்யப்பட்டுள்ளது

தமது பிரதேச மக்களுக்கு திருப்திகரமான சேவையை செய்வதற்கு இரண்டு பாராளுமன்ற ஆயுட்காலம் போதுமானது அவ்வாறுதான் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இரண்டு பாராளுமன்ற ஆயுட்காலப் பகுதிக்குள் ஒரு திறமையான அரசியல்வாதி தமது பிரதேச மக்களுக்கு முழுமையான சேவையை வழங்க முடியும் என்று நான் கருதுகின்றேன். எனவே, மக்கள் எனக்கு ஆணையை வழங்கினால் இக்காலப்பகுதிக்குள் நான் எதிர்பார்த்துள்ள சேவையை வழங்கும் அதேவேளை புதிய அரசியல் தலைமைகளுக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி எமது மாவட்டத்தில் புதியதொரு அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவோம் என்கிறார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்குடாத்தொகுதி வேட்பாளர் ஹபீப் றிபான். மாற்றத்தினுடனான நேர்காணலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார் அவருடன் இடம்பெற்ற முழுமையான நேர்காணல் வருமாறு.

**கேள்வி: எமது பிரதேசத்தில் ஒரு சிரேஷ்ட அரசியல்வாதி உள்ள நிலையில் நீங்கள் அரசியல் செய்ய முற்படுவது ஏன்?**

பதில்: பிரச்சினையே அதுதான் ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியின் செயற்பாடுகளும் சிரேஷ்ட தன்மை வாய்ந்ததாக இருந்திருந்தால் நான் இந்த அரசியலுக்கு வரவேண்டிய தேவை இருந்திருக்காது. எனது கல்வித்துறையிலும், சட்டத்துறையிலும் எந்த கலப்படமும் கிடையாது. "தமிழ் சட்டக் கல்வி நிலையம்" என்ற ஒன்றியத்தின் ஊடாக சுமார் 150க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளை முழு இலங்கையிலும் உருவாக்கியுள்ளேன். அதேபோன்று எட்டு வருடங்களாக சட்டத்தரணியாகவும் 5 வருடங்கள் பதில் நீதவானாகவும் இருந்த நிலையில்தான் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

நான் இதனை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் எமது சிரேஷ்ட அரசியல்வாதி கல்விபுலமை கொண்டவராக அடையாளப்படுத்திக் கொண்டாலும் அவரது கல்வித்துறையிலும், சட்டத்துறையிலும் விமர்சனங்களும், குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டு வருவதை அவதானித்துள்ளேன். அந்த குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் அவரது அரசியல்துறையிலும் குறைந்த பாடில்லை எனவேதான் ஆரம்பத்தில் நாம் ஒரு பிழை விட்டிருப்பதாக தோன்றுகின்றது. இதனால் மாவட்ட மட்டத்தில், மாகாண மட்டத்தில், தேசிய மட்டத்தில் எமது சிரேஷ்ட அரசியல்வாதியின் செயற்பாடு அரச திணைக்களம் முதற்கொண்டு ஆட்சிபீடத்திலுள்ள அரசியல் தலைமை வரைக்கும் மோசமான செயற்பாடாக இடம்பிடித்துள்ளது. எனவே, நாம் விட்ட பிழையை சரிசெய்து மாவட்டத்திற்கும், மாகாணத்திற்கும், ஆட்சிபீடத்திலுள்ள அரசியல் தலைமைக்கும் கல்குடா பிரதேசம் புனிதமானது என்பதை நிரூபிப்பதற்காகவே இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

**கேள்வி: கல்குடா பிரதேசத்திலுள்ள நிர்வாகத்துறையில் நீங்கள் மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக குறிப்பிட்டுள்ளீர்கள் அப்படியாயின் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த உத்தேசித்துள்ளீர்கள் ?**

பதில்: பெரும்பான்மை முஸ்லிம் பிரதேசங்களை சனத்தொகையாக கொண்டுள்ள பிரதேச செயலகங்களாக கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகம் மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகங்கள் காணப்படுகின்றன. இந்த இரு பிரதேச செயலகங்களிலும் வெளியூர் பிரதேசங்களை சேர்ந்த நபர்கள்தான் உயர் பதவிகளை காலாகாலமாக வகித்து வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் உள்ளது.இங்கு நிர்வாக அதிகாரிகள் குறிப்பிட்ட பிரதேசத்தவர்கள் மாத்திரம்தான் பணியாற்ற வேண்டும் என்பதில் நான் உடன்படாது விட்டாலும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இங்கு பணியாற்றிய நிர்வாக அதிகாரிகள் முன்னாள் அமைச்சரின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் கலந்து போய்விட்டார்கள் என்பதையே அவர்களின் செயற்பாடுகளை வைத்து நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

பிரதேச செயலகம் என்பது அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு கட்சிபேதம் பார்க்காமல் சேவையாற்ற வேண்டும் ஆனால் கடந்த காலங்களில் இரு பிரதேச செயலகங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரங்களை அவதானித்தால் ஒரேமாதிரியான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வந்துள்ளதை நான் அவதானித்துள்ளேன். இவ்வாறு கட்சிரீதியாக, அரசியல்ரீதியாக பயனாளிகள் தெரிவு செய்யப்படும் போது உண்மையான பயனாளிகளுக்கான உதவிகள் சென்றடையவில்லை இந்த நிலை தொடர்ந்து சென்றால் இதற்கு நாமும் இறைவனிடம் பொறுப்பு கூற வேண்டும் என்ற அடிப்படையில்தான் இப்போராட்டத்தில் குதித்துள்ளேன். அதேபோன்று எமது ஊரில் பொது நிறுவனங்களை ஒன்றிணைத்து சம்மேளனத்தை அமைத்தல், அனர்த்தங்கள் ஏற்படும் போதும் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான ஏற்பாடுகள் எமது பிரதேசத்தில் இல்லை இதனை கருத்திற்கொண்டு பொது நிதியத்தினை உருவாக்கி அதன்மூலம் உதவுதல். அதேபோன்று எமது பிரதேசத்தின் தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது நாம் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. இதனை கருத்திற்கொண்டு அனைத்து தகவல்களையும் திரட்டுவதற்கான தகவல் மையத்தை உருவாக்குதல் போன்ற அடிப்படையான நிர்வாக ரீதியிலான மாற்றங்களை செய்ய திட்டமிட்டுள்ளேன்.

**கேள்வி: நிர்வாகத்துறை அதிகாரிகளை பிரதேச ரீதியாக மட்டுப்படுத்த முடியாதே அவர்களின் சேவை[illegible] உரித்துடையதுதானா?**

பதில்: 1992 ஆம் ஆண்டு புலிகளினால் படுகொலைசெய்யப்பட்ட ஏ.ஜி.ஏ.உதுமான் அவர்களின் மரணத்தை தொடர்ந்து சுமார் 20 வருடங்களாக எமது பிரதேசத்தில் இருந்து இலங்கை நிர்வாகத்துறைக்கு எவரும் தெரிவுசெய்யப்படாத நிலை காணப்பட்டது. இந்த காலப்பகுதியில் ஏறாவூர் மற்றும் காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் நிர்வாகத்துறையினர் காணப்பட்ட போதிலும் எமது பிரதேசத்தில் அந்த குறைபாடு மிகுந்த மனவேதனையை இங்குள்ள மக்களுக்கு ஏற்பட்டிருந்தது என்பதை இவ்விடத்தில் ஞாபகப்படுத்த வேண்டும்.

நிர்வாகத்துறை அதிகாரிகளின் சேவை எமது தேசத்தின் சகல பாகங்களிலும் இடம்பெற வேண்டும் என்பதுதான் யதார்த்தமானது இதுதான் அப்பதவியின் வியாக்கியானமாகவும் இருக்கின்றது. ஆனால் மிகவும் கஸ்தப்பட்டு, கடும் தியாகங்களுக்கு மத்தியில் இப்பரீட்சையை எழுதி அதில் எழுத்துப்பரீட்சை, நேர்முகப்பரீட்சை என்ற கட்டங்களை சிரமப்பட்டு கடந்து தெரிவாகின்றார்கள்.எமது பிரதேசத்தில் 2012 ஆம் ஆண்டுக்கு பிறகுதான் நான்கு நிர்வாகத்துறை அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த நான்கு அதிகாரிகளும் கடந்த ஏழு, எட்டு வருடங்களுக்கு மேலாக மாவட்டத்தை கடந்து பணியாற்றி வருகின்றார்கள் அந்த வகையில் அபூபக்கர் தாஹிர் மட்டக்களப்பு மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளராகவும், பி.டி.எம். இர்பான் திம்புலாகல பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகவும், ஹைருன் நிஸா வெலிக்கந்தை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகவும், முபாரக் முஹம்மட் வெருகல் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வருகின்றார்கள்.

இந்த அதிகாரிகள் அவர்கள் சேவையாற்றும் பகுதிகளில் சிறப்பாக கடமையாற்றி அப்பிரதேச மக்களின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார்கள்.இந்த அதிகாரிகள் தாம் பெற்ற கல்வியினூடாக இப்பிரதேசத்தில் பணியாற்ற முடியாதா என்று தவிக்கின்றார்கள். ஒரு சிலர் தனிப்பட்டரீதியில் கடும் முயற்சி செய்து எமது பகுதி பிரதேச செயலகங்களுக்கு வருவதற்கு முயற்சித்த போதும் அவர்களின் முயற்சி அரசியல் அதிகாரத்தால் பழிவாங்கப்பட்டுள்ளது. ஏறாவூராக இருக்கலாம், காத்தான்குடியாக இருக்கலாம் அங்கு அப்பிரதேச நிர்வாக அதிகாரிகள்தான் கடமையாற்றி வருகின்றார்கள் அதனால் அப்பிரதேச மக்கள் நிர்வாகரீதியான பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பது மிகவும் குறைவாக காணப்படுகின்றது. எனவேதான், இப்பகுதியை சேர்ந்த அதிகாரிகளுக்குஅந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பது பிழையாக இருக்காது என்று நான் எண்ணுகின்றேன்.

**கேள்வி: உங்களுடைய வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது?**

பதில்: ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வெற்றி மாவட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளர்கள் சார்பில் போட்டியிடும் கட்சிகளில் முஸ்லிம் காங்கிரசுக்கு மரபுவழியான மக்களின் பேராதரவு உள்ளது. அந்தவகையில் கடந்த பொதுத்தேர்தலின் போது எமது கட்சியின் ஆசனம் தக்கவைக்கப்பட்டது. கடந்த தேர்தலில் 38 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பை அடுத்து கூடுதலான வாக்குகளை பெற்றுக்கொண்ட கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திகழ்கின்றது. அவ்வாறான ஒரு முடிவே இத்தேர்தலிலும் எமது கட்சி பெற்றுக் கொள்ளும். இந்தவகையில் கல்குடா தொகுதியில் கடந்தமுறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் சகோதரர் கணக்கறிஞர் றியாழ் அவர்கள் போட்டியிட்டு சுமார் 9093 வாக்குகளை பெற்றிருந்தார். அதேபோன்று 2018இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத்தேர்தலிலும் எமது கட்சி கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் கூடுதலான ஆசனங்களை கைப்பற்றியதுடன் 12500க்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக்கொண்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்த தேர்தலில் சுயேட்சை குழுவாக போட்டியிட்டே அந்த வாக்கு வங்கியை பெற்றுக்கொண்டது. இந்தவகையில் இம்முறை பொதுத் தேர்தலில் எமது கட்சி சுமார் 16000க்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றுக் கொள்ளும். அதேபோன்று ஏறாவூரிலும் 14000க்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக்கொள்ளும். அதேபோன்று காத்தான்குடி பிரதேசத்தில் 5000 வாக்குகளை பெற்று மாவட்டத்தில் அதிகப்படியான வாக்குகளை பெற்று எமது கட்சி மூன்றாவது ஆசனத்தை கைப்பற்றும். இதில் கல்குடாவில் கூடுதலான விருப்பு வாக்குகளை பெற்று இன்ஷா அல்லாஹ் பாராளுமன்றம் செல்வோம் இந்த வெற்றியின் மூலம் எமது மக்களின் தன்மானம் காக்கப்பட்டு ஒற்றுமை வெளிப்படும் இதனை தொடர்ந்து புதிய உத்வேகத்துடன் எமது கட்சியை கொண்டு செல்ல தீர்மானித்துள்ளேன்.

**கேள்வி: உங்களுடைய கட்சிக்குள்ளே விருப்பு வாக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது ஏனைய பிரதேசத்தவர்கள் இங்கு வந்து பிரசாரம் செய்யக்கூடாது என்று நீங்கள் குறிப்பிடுவது ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடாக பார்க்கப்படுகின்றதே?**

பதில்: கடந்த காலங்களில் எமது பிரதேச மக்களின் வாக்குகள் ஏனைய பிரதேசத்தவர்களினால் தவறான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்து வருகின்றது. பணத்துக்காகவும், உணவுப்பொதிகளுக்காகவும் இங்குள்ள மக்கள் வாக்கு போடுபவர்கள் என்ற ஒரு மட்டமான பார்வையை சக வேட்பாளர் கடந்த தேர்தல்களில் இப்பிரதேசத்தில் உருவாக்கியுள்ளார். (10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமையவுள்ள பாராளுமன்றத்தில் நாங்கள் மக்களின் குரலாக ஒலிப்போம்

நேர்காணல் : நஜிமிலாஹி- எப்.ஏ.எம்.றிபாஸ்

அமையவுள்ள பாராளுமன்றத்தில் நாங்கள் மக்களின் குரலாகத்தான் ஒலிக்க முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. அனேகமாக நாங்கள் மக்களின் குரலாகத்தான் ஒலிப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன என்கிறார் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும், ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான எம்.எஸ்.எஸ் அமீர் அலி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பான மாற்றத்தின் நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவருடன் இடம்பெற்ற நேர்காணலை மாற்றம் வாசகர்களுக்காக இங்கே முழுமையாக தருகின்றோம்.

**கேள்வி : அமையவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் உங்களின் அபிப்பிராயம் என்ன ?**

பதில் : அமையவுள்ள பாராளுமன்றத்தை பற்றி நான் பயப்படுகின்றேன். அது எவ்வாறு அமையப்போகின்றது என்பது தொடர்பில் ஒரு அரசியல் தலைவன் என்றவகையில் எதிர்வு கூறுவதில் சங்கடம் இருக்கின்றது. அந்தவகையிலே மக்களின் குரலாகத்தான் ஒலிக்க முடியுமா என்கின்ற விடயம் இருக்கின்றது. எனது எதிர்பார்ப்பும் மக்களின் குரலாக ஒலிக்க முடியும் என்பதை எதிர்வு கூறக்கூடியதாகவுள்ளது.

**கேள்வி : 2015 இல் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக நியமிக்கப்பட்ட தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் நியமனம் சமூகத்திற்கு பிரயோசனமாக அமைந்தது என்று நீங்கள் கருதுகின்றீர்களா ?**

பதில் : தேசியப்பட்டியல் என்பது இந்த நாட்டின் தேசியத்துக்கு பங்களிப்பை செய்யக்கூடியவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மிகப் பெருமதியான நிகழ்வு. துரதிஷ்டவசமாக முஸ்லிம் பிரதேசங்களிலே அதனை அவ்வாறு வழங்க முடியாத சூழ்நிலை இருப்பதை நான் கவலையோடு ஒத்துக்கொள்கின்றேன். இருந்தாலும் எதிர்காலத்தில் நல்ல கல்வியலாளர்களுக்கும் சமூகத்திலே மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவர்களுக்கும் அது வழங்கப்பட வேண்டும் என நினைக்கின்றேன். அந்த வகையிலே எங்களுக்கு கிடைத்த ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்தை புத்தளத்தை சேர்ந்த சிரேஷ்ட அரசியல்வாதி நபவி அவர்களுக்கு முதற்கட்டமாக வழங்கினோம். இந்த விடயத்தில் சகோதரர் நபவியும் புத்தள மக்களும் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள்ளே அந்த தேசியபட்டியலை மீள ஒப்படைத்ததையிட்டு நாங்கள் பெருமிதமடைகின்றோம். ஆனால் அந்த தேசிய பட்டியலின் இரண்டாவது சந்தர்ப்பம் சம்மாந்துறைக்கு வழங்கப்பட்டது.

அதுபோல எங்களிடத்திலே எதிர்காலத்தில் இம்மாவட்டத்தில் ஒரேயொரு பிரதிநிதியைதான் பெறக்கூடிய நிலை ஏற்படலாம். அதற்கான ஒரு முன்னோடிப் பரீட் சையாக இந்த வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். இன்ஷா அல்லாஹ் இறைவனின் துணையுடன் இம்மாவட்டத்தில் நிச்சயமாக நாங்கள் ஒரு பிரதிநிதியை பெற்றுக்கொள்வோம். நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை பொறுத்தவரை அவர்கள் சிறு தொகையினராக காணப்பட்டாலும் இந்நாட்டில் தேசிய கட்சிகளிடையே அவர்களுக்கு ஒரு நல்ல மதிப்பும் அங்கீகாரமும் இருக்கின்றது. இதனையே எங்களுடைய சஜித் பிரேமதாஸாவும் கூறிவிட்டு சென்றுள்ளார் இவ்வாறான நல்ல மனிதர்கள் நாட்டிக்கு தேவையென எனவே, ஒரு புதிய பரீட்சையை எழுதுகின்றோம் நிச்சயமாக நாங்கள் இந்த பரீட்சையில் வெற்றியடைவோம்.

**கேள்வி : நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் கொள்கைகளில் நீங்கள் உடன்படுகின்றீர்களா ?**

பதில் : எல்லோருமே மக்களின் புள்ளடிகளை எதிர்பார்ப்பவர்கள்தான். அவர்களிடம் என்ன கொள்கையாக இருந்தாலும் மக்களின் புள்ளடிகளுக்கு தலைவணங்கியே ஆக வேண்டும். எந்த கட்சியாக இருந்தாலும் மக்களின் தீர்ப்புக்கு அடிபணிந்துதான் ஆக வேண்டும். அவர்களின் கொள்கைகள் எவ்வாறு வழங்கப்பட்டிருந்தாலும் கூட

சகோதரர் ஹிஸ்புல்லா இப்பிரதேசத்திலே பாராளுமன்ற உறுப்பினராக வரவேண்டும் என்பதற்காக தூரநோக்கு சிந்தனை இல்லாமல் செய்து கொண்ட மாபெரும் அநியாயம்தான் இந்த சம்பவம். அவர் அப்போது தூரநோக்கோடு செயற்பட்டிருப்பாராயின் இந்த பிரச்சினை மக்கள் மயப்படுத்தப்பட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டு ஒரு வரையறைக்குள் மக்களின் புரிந்துணர்வுகளுடன் செய்து கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு விடயத்துக்கு எடுத்த உடனே தீர்வினை பெற்றுக்கொள்ள முடியாது. முப்பது வருட ஆயுதப் போராட்டமாக இருக்கலாம் 60 வருடகால பலஸ்தீனப் போராட்டமாக இருக்கலாம் இவைகள் எவையும் மக்களுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கவில்லை. இவ்வாறான பிரச்சினைகள்



**மக்களுக்கு அநீதி நடந்தால் அதனை தட்டிக் கேட்டு மக்களின் குரலாக ஒலிப்பதுதான் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அடிப்படை சித்தார்த்தமாகும். இதனுடன் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஒத்துப் போகும் என்றே நான் நினைக்கின்றேன்.**

**கேள்வி : மட்டக்களப்பு மாவட்டத்தில் 2020 பொதுத்தேர்தல் கலநிலவரம் எப்படி உள்ளது ?**

பதில் : இம்முறை நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் 3 ஆசனம் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் ஒரு ஆசனம் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐந்தாவது ஆசனத்திற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்குமிடையே கடும் போட்டி நிகழும் என்பதை எதிர்வு கூறலாம். அந்தவகையில் இரண்டாவது சக்தியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி திகழும். கடந்த தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்டு 32359 வாக்குகளை பெற்றிருந்தாலும் இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுகின்ற தமிழ், முஸ்லிம் வேட்பாளர்கள் மிக முக்கியமானவர்கள் என்ற படியினால் மாவட்டத்தில் கூடுதலான வாக்குகளைப்பெற்ற இரண்டாவது சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தி இருக்கும் என்பது எனது எதிர்பார்ப்பாகவுள்ளது.

**கேள்வி : இம்முறை தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எத்தனை ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் ?**

பதில் :
மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வன்னி,குருணாகல், அனுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தி 7 பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக்கொள்ளும் என நம்புகின்றோம்.

சம்மாந்துறையை கௌரவிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எங்களிடமும் மக்களிடம் இருந்தது. சம்மாந்துறை மக்களின் எதிர்பார்ப்பை கட்சி நிறைவு செய்தது. ஆனால் அந்த பிரதிநிதி மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றினாரா என்பதில் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. அந்த நபரும் இம்முறை தேர்தலில் பிரிதொரு கட்சியில் போட்டியிடுகின்றார் எனவே, சம்மாந்துறை மக்களும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவாளர்களும் இந்த தேர்தலில் அவருக்கான தீர்ப்பை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். அவர் எத்தனை ஆயிரம் வாக்குகளை பெறப்போகின்றார் என்பதை இம்முறை தேர்தலில் நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கும்.

**கேள்வி : அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியுடன் உடன்பட்டமை பற்றி குறிப்பிடுங்கள் ?**

பதில் : மட்டக்களப்பு மாவட்ட மக்களிடையே புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அந்த எதிர்பார்ப்பு புதிய முகங்கள் பற்றியதாக தமிழ் உறவுகளிடத்திலும் இருந்தது. அந்த எதிர்பார்ப்பு முஸ்லிம் பிரதேசங்களிலும் இல்லாமல் இல்லை.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அடிப்படை மக்களுக்கான குரல் கொடுக்க வேண்டும் என்பதே மக்களுக்கு அநீதி நடந்தால் அதனை தட்டிகேட்டு மக்களின் குரலாக ஒலிப்பதுதான் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அடிப்படை சித்தார்த்தமாகும். இதனுடன் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஒத்துப்போகும் என்றே நான் நினைக்கின்றேன். இவ்வாறான நிலையில் அவர்களின் கொள்கைகளில் நாங்களும் எங்களின் கொள்கைகளில் அவர்களும் ஒத்துப்போவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக காணப்படுகின்றது. இதில் இரு கட்சிகளும் கொள்கையளவில் முரண் படுவதற்கு வாய்ப்பில்லை விசேடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏனைய அரசியல்வாதிகளைப் போல அதிகார வெறி பிடித்தவர்கள் நாங்கள் இல்லை.

**கேள்வி : நீங்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்பிருந்தே கோறளைப்பற்று மேற்கு காணிப்பிரச்சினை, கோறளைப்பற்று மத்தி பிரதேச சபை ஆகிய பிரச்சினைகள் காணப்பட்டது. இந்த பிரச்சினைகளில் நீங்கள் எவ்வாறான தீர்வினை பெற்றுள்ளீர்கள் ?**

பதில் : கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று மேற்கு பிரச்சினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் காலத்திலேதான் இந்த அநியாயம் நடைபெற்றது.

தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். இதனை வருகின்ற அரசாங்கத்துடன் பேசி தமிழ் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடன் தீர்க்கப்பட வேண்டும் இப்பிரச்சினைக்கு ஒரு நாள் தீர்வு வரும் என்று நம்புகின்றேன்.

என்னைப்பொருத்த வரை கல்வி, காணி இந்த இரண்டு பிரச்சினைகளையும் மையப்படுத்தி அரசியலுக்கு வந்தவன். கல்வி ரீதியான பங்களிப்பை இந்த மாவட்டத்துக்கும் மக்களுக்கும் செய்திருக்கின்றேன். ஆனால் காணிரீதியான முன்னெடுப்பில் அதிக தூரம் பயணித்திருக்கின்றேன். பாராளுமன்ற விவாதங்கள், பாராளுமன்ற தெரிவு குழுக்கள், மாவட்ட செயலக விவாதங்களின் நியாயப்படுத்தல், மாகாண மட்டத்திலான நியாயப்படுத்தல், தேசிய மட்டத்திலான நியாயப்படுத்தல் என்ற வகையில் பயணித்து இந்தப்பிரச்சினை தொடர்பான ஒரு தெளிவான ஆவணத்தை திரட்டியிருக்கிறோம் எதிர்காலத்தில் இந்தப்பணியை மேற்கொள்வதற்கு இலகுபடுத்தலை செய்திருக்கின்றோம். எதிர்வரும் காலங்களில் இப்பிரச்சினை முடிவடையும் என நான் நினைக்கின்றேன் அவ்வாறு முடிவடையவில்லையென்றால் வருகின்ற புதிய அரசியல் தலைமைகள் இச்சமூகத்திற்கு இதனை செய்து கொடுக்க வேண்டும்.

**என்னைப்பொருத்த வரை கல்வி, காணி இந்த இரண்டு பிரச்சினைகளையும் மையப்படுத்தி அரசியலுக்கு வந்தவன். கல்வி ரீதியான பங்களிப்பை இந்த மாவட்டத்திற்கும், மக்களுக்கும் செய்திருக்கின்றேன். ஆனால் காணிரீதியான முன்னெடுப்பில் அதிக தூரம் பயணித்திருக்கின்றேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி: கோறளைப்பற்று மேற்கு காணி பிரச்சினை தொடர்பான நிகழ்வுகள் இடம்பெற்ற போது இப்பிரதேசத்தில் மர்ஹூம் முகைதீன் அப்துல் காதர் மக்கள் பிரதிநிதியாக செயற்பட்டார் அப்படியிருந்தும் முன்னாள் ஆளுனர் ஹிஸ்புல்லாஹ் இப்பிரச்சினைக்கு எவ்வாறு காரணமாக முடியும் ?**

(10ம் பக்கம் பார்க்க)

# கொரோனாவும் முஸ்லிம் இனவெறுப்பு அரசியலும்

கொரோனா வைரஸ் என்று சொல்லக்கூடிய கோவிட்-19 இன்று உலகம் முழுக்க பரவி பெருமளவு உயிர் சேதத்தையும், நாம் நினைத்து பார்க்கவே முடியாத அளவிற்க்கான பொருளாதார அழிவையும் ஏற்படுத்தியிருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு பிறகான உலக ஒழுங்கையே மாற்றியமைக்க கூடியதாக கொரோனாவின் தாக்கமும் பாதிப்பும் இன்று விரிவடைந்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனாவிற்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் அதேவேளையில் இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் கொரோனா என்ற நோயை வைத்து முஸ்லிம் இனவெறுப்பு பிரசாரங்களை முன்னெடுத்திருந்தனர். முஸ்லிம்கள்தான் கொரோனாவை நாட்டில் பரப்புகின்றார்கள் என்ற இன முரண்பாடுகளை ஊக்கப்படுத்தும் முஸ்லிம் இனவெறுப்பு பிரசாரங்கள் முனனெடுக்கப்பட்டதை நாம் அவதானிக்கலாம். இந்தப் பிரச்சாரப்பணியில் இந்திய ஊடகங்கள் ஒரு படி முன்சென்று "ஜிஹாத் வைரஸ்" என கொரோனாவுக்கு பெயர்வைத்து முஸ்லிம்களுடன் ஏனைய மதத்தவர்கள் தொடர்புகளை பேணினால் அவர்களுக்கும் ஜிஹாத் வைரஸ் தொற்றி கொலை செய்யப்படுவார்கள் என்ற அடிப்படையில் பிரசாரங்கள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. இந்த பிரச்சாரம் இலங்கையிலும் எதிரொலித்ததை நாம் அவதானிக்கலாம்.


இந்திய டில்லியில் இடம்பெற்ற தப்லீக் ஜமாஆத் இஜ்திமாவை மையப்படுத்தியே இந்தியாவில் முஸ்லிம் இன வெறுப்பு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. சமூக இடைவெளியை பேணாமல் நாட்டின் சட்டத்தை மீறி இஜ்திமா நடாத்தியதாக தப்லீக் ஜமாத் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த இஜ்திமாவில் இலங்கையில் இருந்து சிலர் பங்குபற்றியதாக தகவல்கள் வெளியாகியது இந்த செய்தியும் தென்னிலங்கை ஊடகங்களுக்கு முஸ்லிம் இனவெறுப்பு பிரசாரத்துக்கான தீணியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையில் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் அந்த பிரதேசத்திலுள்ள முஸ்லிம்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட பிரதேசத்துடனான தொடர்புகள் முடக்கப்பட்டது.

இந்த சம்பவத்தை வைத்து இனவெறுப்பு பிரசாரத்தை தீவிரப்படுத்தும் ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் என்பன முஸ்லிம்களை மாத்திரம் அடையாளப்படுத்தி ஒலி, ஒளிபரப்பு செய்தது. ஆனால் பண்டாரநாயக்கா மாவத்தையில் முதலாவது கொரோனா தொற்றாளராக இனங்காணப்பட்டவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டில் முதலாவது கொரோனா வைரஸ் தொற்றாளர் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி கண்டறியப்பட்டார். 44 வயதுடைய சீனா நாட்டுப்பெண் இலங்கையில் முதலாவது தொற்றாளராக இனங்காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதோடு அப்பெண் பெப்ரவரி 19 ஆம் திகதி பூரண குணமடைந்ததாக அரசாங்கம் அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து மார்ச் 11 ஆம் திகதி கொரோனா தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கையர் அடையாளங்காணப்பட்டார். இவர் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டியாக செயற்பட்டிருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மார்ச் 11 இல் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டு மே மாதம் 11 ஆம் திகதி ஊரடங்கு சட்டம் விடுவிக்கப்பட்டது. சுமார் 52 நாட்களாக கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக நாடு முடக்கப்பட்டிருந்தது.






எமது நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் பரவலாக்கப்படாமல் கட்டுப்படுத்தப்பட்டது என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. தற்போது சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் எவரும் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கிடையில் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து புதிய கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டமை இலங்கையில் இரண்டாவது கொரோனா அலை உருவெடுத்துள்ளதா என்ற வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றுவருவதை அவதானிக்க முடிகிறது.

கொரோனா வைரஸ் தீவிரமாகபரவாமல் குறைக்கப்பட்டதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகம் முனைப்புடன் செயற்பட்டிருந்தது. இந்த கட்டுரை எழுதப்படும் நிலையில் கொரோனா வைரஸினால் 215 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கை 103 வதுஇடத்தில் காணப்படுகின்றது.

ஆனாலும் ஒரு சில குறிப்பிட்ட நாடுகள் ஆரம்பத்தில் தங்கள் நாட்டின் வெளித்தொடர்புகளை கட்டுப்படுத்தியதால் இந்த வைரஸின் பேராபத்திலிருந்து உயிர்களையும், உள்நாட்டு பொருளாதாரத்தையும் காத்க்கொள்ள முடிந்தது. ஆனால் எமது நாட்டில் முதலாவது கொரோனா தொற்றாளர் இனங்காணப்பட்டு 43 நாட்களுக்கு பிறகுதான் நாட்டில் திடீரென ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதனால் வெளிப்பிரதேசங்களில் இருந்து கொழும்பில் அல்லது ஏனைய மாகாணங்களில் வேலைநிமிர்த்தம் சென்றிருந்தவர்கள் ஒன்றரை மாதங்களாக அகப்பட்டு இருக்க வேண்டிய கடுமையான நிலை ஏற்பட்டது.

இவ்வாறு மக்களை சங்கடப்படுத்தாமல் முன்கூட்டியே தற்காப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இதன் முன்னேற்றம் இன்னும் அதிகரித்திருக்கும் அத்தோடு உள்நாட்டு பொருளாதார கட்டமைப்புக்கள் வலுவாக இருந்திருக்கும் என்ற குற்றச்சாட்டுக்களும் எதிர்தரப்பு அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. தேர்தலை நோக்காக கொண்டு செயற்பட்டதனால் கொரோனா வைரஸை முழுமையாக அரசாங்கம் கட்டுப்படுத்த தவறிவிட்டது. இதனால்தான் கொரோனா வைரஸின் தாக்கம் வியாபித்திருந்த நிலையில் இலங்கையின் எட்டாவது பாராளுமன்றத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மார்ச் 02 ஆம் திகதி கலைத்தார் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸா குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி நாடாளுமன்றத் தேர்தலை ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்துவதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டது. கொரோனா வைரஸின் பரவல் வேகமாக பரவிய நிலையிலும் வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மார்ச் 19 ஆம் திகதியுடன் வேட்பு மனுத்தாக்கல் நிறைவடைந்த நிலையில் அடுத்த நாள் 20 ஆம் திகதி நாடு தழுவிய ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

ஒரு மாத காலத்துக்கும் மேலாக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டமையினாலும் கொரோனா வைரஸின் தொற்று வேகமாக அதிகரித்த படியினாலும் ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாது என தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது. பின்பு ஜூன் 20 ஆம் திகதி தேர்தலை நடாத்துவது என்ற முடிவுக்கு தேர்தல் ஆணைக்குழு வந்த போதும் கொரோனா வைரஸின் தாக்கம் தீவிரமாக இருந்தமையினால் இரண்டாவது தடவையும் தேர்தலை பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கிடையில் தேர்தல் நடத்துவதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் ஜூன் 02 ஆம் திகதி மேற்படி மனுக்களை விசாரணையின்றி உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதற்கமைவாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி தேர்தல் நடாத்தப்படுமென தேர்தல் ஆணைக்குழு மூன்றாவது தடவையாக தேர்தல் திகதியை அறிவித்துள்ளது.

ஏப்ரல் 21 இல் நிகழ்த்தப்பட்ட ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான இனவெறுப்பு பிரசாரங்கள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் தீவிரமாக்கப்பட்டதனால் அது பெரும்பான்மை மக்களின் வாக்குகளில் தாக்கம் செலுத்தியது. இந்த சூழ்நிலையை பயன்படுத்தி பொதுத் தேர்தலை அணுகுவதுதான் முஸ்லிம் இனவெறுப்பு கொள்கைவாதிகளின் திட்டமாகவும் இருந்தது.

**" ஏப்ரல் 21 இல் நிகழ்த்தப்பட்ட ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான இனவெறுப்பு பிரசாரங்கள் பெரும்பான்மை மக்கள் மத்தியில் தீவிரமாக்கப்பட்டதனால் அது பெரும்பான்மை மக்களின் வாக்குகளில் தாக்கம் செலுத்தியது "**

அதனால்தான் ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலுக்கான திகதியாக அறிவிக்கப்பட்டு கொரோனாவுக்கு மத்தியிலும் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருந்தது.

ஆனால் துரதிஷ்டவசமாக கொரோனா வைரஸ் தீவிரமாக பரவியதை அடுத்து வேட்பு மனு நிறைவடைந்த அடுத்த நாள் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

இதனால் ஈஸ்டர் தற்கொலை குண்டுத்தாக்குதல் என்ற நிலையை விட்டு கொரோனா வைரஸை காவும் காவிகளாக முஸ்லிம்கள் அடையாளப்படுத்தப்படும் புதிய முறையை முஸ்லிம் இனவெறுப்பு கொள்கைவாதிகள் தென்னிலங்கை ஊடகங்கள் மூலம் இலாபகமாக பரப்பச் செய்தார்கள். இந்த விடயத்தில் அவர்கள் திருப்தியும் கண்டார்கள்.

இந்த பிரசாரங்களுக்கு ஒரு சில முஸ்லிம்களின் நடவடிக்கைகளும் அவர்களுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. பிரபல மாணிக்கக்கல் வியாபாரி கொரோனா தொற்றுக்குள்ளாகி அவர் தொடர்பான தகவல்கள் வெளியாகிய விதம் முஸ்லிம்கள்தான் கொரோனா வைரஸை நாட்டில் பரப்புகின்றார்கள் என்ற பிரசாரம் திட்டமிடப்பட்ட முறையில் முகாமை செய்யப்பட்டு பரப்பப்பட்டது என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

இதற்கிடையில் கொரோனா நோயின் வேகமான பரவல் மற்றும் அதனால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு சிலரின் நிலை கவலைக்கிடமாக காணப்பட்டது. கொரோனா மரணம் நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் காணப்பட்டமையினால் சுகாதார அமைச்சு மார்ச் 27 ஆம் திகதி கொரோனா வைரஸினால் மரணிப்பவர்களின் இறுதிக்கிரிகைகள் இடம்பெரும் முறைமை தொடர்பில் சுற்றுநிருபமொன்றை வெளியிட்டது. உலக சுகாதார அமைப்பின் பரிந்துறைகளின் படி கொரோனா வைரஸ் மூலம் மரணிப்பவரின் இறுதிக்கிரிகைகள் தகனம் செய்யப்பட வேண்டும் அல்லது புதைக்கப்பட வேண்டும் என்ற இரு வழிமுறைகளை சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கத்தக்கது. கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக முஸ்லிம் ஒருவரின் ஜனாஸா மார்ச் மாதம் 30 ஆம் திகதி நீர்கொழும்பு வைத்தியசாலையில் இரவு 7.00 மணிக்கு பதிவானது. குறிப்பிட்ட ஜனாஸாவை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் மார்ச் 27 ஆம் திகதிய சுற்று நிருபத்தையும் மீறி குடும்ப உறுப்பினர்களுக்கும் காட்டப்படாமல் அவசர அவசரமாக அன்று இரவே ஜனாஸா தகனம் செய்யப்பட்டது.

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்குடா பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட Help Dress தன்னார்வப் பணி

ஏ.எஸ். எம் பாஹிம் ஸலாம் -ஓட்டமாவடி
(ஜாமிஆ நளீமியா)

சமூகத்தில் இளைஞர்களின் வகிபாகம் முக்கியமானது இளைஞர் சமூகத்தின் பங்களிப்பில்தான் அச்சமூகத்தின் எதிர்காலமும் தங்கியிருக்கின்றது. சமூதாயத்தின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பை இளைஞர் சமூகம் செய்து வருகின்றது. இளைஞர்களின் பார்வை புதினம் நிறைந்தது சமூக அவலங்களை போக்க துடிக்கும் இளைஞரகளின் இதயங்கள் எமது சமூகத்தில் வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையில் கொரோனா நோயின் பரவலால் பாதிக்கப்பட்ட கூலி வேலை செய்பவர்களின் அன்றாட வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டதை போன்று அவர்களின் மற்றுமொரு தேவையான உடையின் தேவைப்பாடும் அதிகமாக காணப்பட்டது. முஸ்லிம்கள் நோன்பு பெருநாளை எதிர்கொண்டிருந்த நிலையில் அவர்களுக்கான ஆடைக்கொள்வனவின் தேவையை உணரந்து இக்குறையினை போக்குவதற்காக ஆர்வமுள்ள இளைஞர்கள் இணைந்து Help Dress என்ற நாமத்தோடு ஒரு தன்னார்வ பணியை முன்னெடுத்து சுமார் 663308 ரூபாய் பெருமதியான உடைகளை வழங்கிவைத்தனர் இவர்களின் இப்பணி பாதிக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கும் சென்றடைந்தமை இங்கு குறிப்பிட்டு செல்ல வேண்டிய விடயமாகும் அந்தவகையில் Help Dress தன்னார்வப்பணி தொடர்பில் இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

உலகளவில் ஏழைகளுக்கான உதவிகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவை முதலில் "பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இருப்பினும் அதிகளவான உதவிகள் உணவு வழங்குவதனை அடிப்படையாகக்கொண்டே இடம்பெறுவவதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

உணவைப்போன்று உடையும் ஒரு மனிதனின் அத்தியாவசியத் தேவைதான். தன்மானத்தை காக்கும் ஆடையின்றி ஒரு மனிதன் வாழ்வது உணவின்றி வாழ்வதை விடவும் கொடியது. எத்தனையோ பேர் ஒரு நல்ல ஆடை இல்லாமல் வெளியில் தலைகாட்டுவதற்கே வெட்கப்படுகின்றனர். எத்தனையோ நிகழ்வுகளை இதன் காரணமாக தவிர்க்கின்றார்கள். தனது சின்னஞ்சிறு குழந்தைகளுக்காவது நல்ல ஆடைகளை உடுத்து அழகுபார்க்க வேண்டுமென்று பல தாய்மார்கள் ஏங்கித்தவிர்ப்பதையும் சமூகத்தில் காண முடிகின்றது.

எமது கல்குடா பிரதேசத்திலும் இந்நிலை இல்லாமலில்லை அந்த வகையில் ஏழைகளுக்கு உடையளிப்பதன் தேவையையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து இதனை ஒழுங்குபடுத்தப்பட்டதொரு வேலைத்திட்டமாக உருவாக்கப்பட்டதே "Help Dress Volunteering" எனும் தன்னார்வப்பணியாகும். இறைவன் உதவியால் வெற்றிகரமாக அப்பணி நிறைவு பெற்றது.

வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் மக்கள் சந்தோசமான நிலையில் கடந்த நோன்புப் பெருநாளை எதிர்நோக்க வேண்டும் என்ற நோக்குடன் இப்பணி முன்னெடுக்கப்பட்டது. பயன்படுத்தாத ஆடைகள் அல்லது ஒரு சில தடவைகள் மாத்திரம் பாவித்த ஆடைகள் என்று எமது வீடுகளில் அனேகமான உடைகள் இருக்கின்றது. ஆனால் மறுபுறத்தில் அது கூட இல்லாதவர்கள் எமது சமூகத்தில் காணப்படுகின்றார்கள்.

அவ்வாறான ஆடைகள் இல்லாதவர்களுக்கு ஆடைகளை பெற்றுக்கொடுக்கும் போது அவர்கள் பெரும் மகிழ்ச்சியடைவார்கள். அந்தவகையில் புதிய ஆடைகளையும், பயன்படுத்தப்பட்ட நல்ல நிலையில் உள்ள ஆடைகளையும் ஏழைகளிடத்தில் கொண்டு சேர்க்கும் பணியாக இது இடம் பெற்றது. இப்பணி முழுவதும் பொதுநலனை அடிப்படையாகக் கொண்ட ஒரு தன்னார்வ சேவையாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த தன்னார்வப் பணியின் உருவாக்கத்தை அவதானித்தால் எதேர்ச்சையாக இரு நண்பர்களின் கலந்துரையாடலின் போது தோன்றிய எண்ணமாகும். தலைநகரில் இது போன்றதொரு பணி நிறுவன மயப்படட்டு இயங்கி வருவதைஅறிந்த நண்பர்கள் எமது ஊரிலும் இப்பணியை ஆரம்பிக்க வேண்டும் என்றநோக்கத்தில் 3 பேர் கொண்ட அணியாக முகநூலில் முதலாவது ஆடை சேகரிப்பு விளம்பரத்தை வெளியிட்டனர். இதன் பின்னர் பொது அழைப்பொன்று மேற்கொள்ளப்பட்டுமுதலாவது தன்னார்வ பணி குழுக்கூட்டம் இடம்பெற்றது. இதில் பலரின் வருகையுடன் சில முடிவுகளும் எடுக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து நல்ல நிலையில் உள்ள பாவித்த ஆடைகள் சேகரிப்பு பணி முதற்கட்டமாக இடம்பெற்றது. வறுமையின் கோரப்பிடிக்குள் வாழும் ஏழைகளும் கடந்த நோன்புப் பெருநாளை புதிய ஆடைகளை அணிந்து மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும் என்பதனை நோக்காகக் கொண்டு இப்பணி செயற்பட்டது.

## செயற்பாட்டு வழிமுறைகள்

01. தன்னார்வ பணியாளர்களை ஒன்று திரட்டல்.நெருங்கிய நண்பர்கள் முதற்கட்டமாக இணைந்து கொண்டதுடன் சமூக வலைத்தளங்களில் பதிவிடப்பட்ட விளம்பரங்களை பார்வையிட்டவர்கள் தன்னார்வளராக இப்பணியில் இணைந்து கொண்டனர். மொத்தமாக 18 தன்னார்வாளர்கள் இப்பணியில் கைகோர்த்தனர் விஷேடமாக எமது தன்னார்வாளர்களுக்கான செயலமர்வு " தன்னார்வ பணி மற்றும் தன்னார்வாளர் ஒருவர் பெற்றிருக்க வேண்டிய பண்புகள் " எனும் கருப்பொருளில் நடாத்தப்பட்டது.

### 02.ஆடை சேகரிப்பு

ஆரம்ப கட்டமாக இப்பணியானது கடந்த மே மாதத்தின் தொடக்கத்துடன் ஆடைகளை சேகரிக்கத் பணி செயற்படுத்தப்பட்டது. புதிய ஆடைகளும், பாவித்த நல்ல நிலையில் உள்ள ஆடைகளும் சேகரிக்கப்பட்டது. சமூக வலைத்தளங்களில் இப்பணி பற்றி அறிந்த நபர்கள் பலரும் Help Dress யை தொடர்பு கொண்டு அவர்களால் முடிந்த உதவிகளை




வழங்கினார்கள். புதிய ஆடைகளும் கொள்வனவும் செய்யப்பட்டது. மேலும் குறிப்பாக எமது பிரதேச ஆடையகங்களும் பெறுமதியான பல புதிய ஆடைகளை வழங்கினர். இந்த வகையில் பிறந்த குழந்தை முதற்கொண்டு வயோதிபர் வரை அனைவருக்குமான ஆடைகள் கிடைக்கப்பெற்றன அதிலும் குழந்தைகளுக்கான ஆடைகளே அதிகளவில் கிடைக்கப்பெற்றது.

### 03. நிதி சேகரிப்பு

புதிய ஆடைகளை கொள்வனவு செய்து வழங்குமாறு வேண்டி பல நபர்கள் பணம் மூலம் உதவிகளை வழங்கினர். வெளிநாடுகளில் பணியாற்றும் சகோதரர்களும் அவர்களது உதவிகளை பணமாக அனுப்பி வைத்தனர்.

### 04. தேர்வு மற்றும் தரம்பிரித்தல்

பாவித்த நல்ல நிலையில் உள்ள ஆடைகள் அனைத்தும் மீண்டும் ஒரு தடவை எமதுதன்னார்வளர்களால் பரிசோதிக்கப்பட்டு பின் னர், வழங்கத்தகாத ஆடைகள் நிராகரிக்கப் பட்டன. அதன் பின்னர் பாவித்த மற்றும் புதிய ஆடைகள் அளவுகளுக்கேற்ப தரம் பிரிக்கப்பட்டது.

### 05. பயனாளிகளை இனம்காணல்.

கடினமானதும்,பொறுப்புணர்ச்சி மிக்கதுமான பகுதியாக பயனாளிகள் பற்றிய தெரிவு காணப்பட்டது. எந்தவித பக்க சார்புமின்றி தகுதியுடையவர்களுக்கே ஆடைகள் சென்றடைய வேண்டும் என்பதில் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அந்த வகையில் புதிதாக இஸ்லாத்தை ஏற்றோர், பெற்றோரை இழந்தோர், மாற்று திறனாளிகள் , விதவைகள், பெண்களால் தலைமை தாங்கும் குடும்பங்கள் (கணவர் விவாகரத்து செய்து பல பிள்ளைகளுடன் ஆதரவற்ற நிலையில் உள்ள குடும்பம், கணவன் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ள குடும்பங்கள், வீதிகளில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளவர்கள் போன்றவர்களுக்கு ஆடைகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதுபயனாளிகளின் அனைத்து தரவுகளும் ஆரம்பகட்டமாக பதிவு செய்யப்பட்டதன் பின்னர் முடியுமானவரை பயனாளிகள் தொடர்பில் களவிஜயம் செய்து அவர்கள் உண்மையில் தகுதியுடையவர்கள் தானா? என்பதை ஊர்ஜிதம் செய்த பின்னரே ஆடைகள் வழங்கப்பட்டது. மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்களே பயன்பெற வேண்டும் என்ற முன்னுரிமைப்படுத்தல் அடிப்படையில்

### 06. ஆடை விநியோகம்

மே மாதம் 13 திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதிகளில் ஆடைகள் விநியோகம் செய்யப்பட்டது. ஆரம்ப கட்டமாக சில குடும்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

குறிப்பிட்ட சில பிரதேசங்களை தெரிவு செய்து அங்கு தேவையான ஆடைகளை கொண்டு சென்று அவர்களுக்கான ஆடைகள் வழங்கப்பட்டது. பின்னர் ஆடைகள் அனைத்தும் ஒரு இடத்தில் நிலையத்தில் சேகரிக்கப்பட்டு அங்கு பயனாளிகளை வரவழைத்து வழங்கப்பட்டது. பயனாளிகளை அழைத்து வருவதற்கான போக்குவரத்து வசதிகள் யாவற்றையும் Help Dress மேற்கொண்டிருந்தது. வர முடியாத நிலையிலுள்ள குடும்பங்களுக்கு வீடு தேடி சென்று வழங்கி வைக்கப்பட்டது. இவ்வாறு மொத்தமாக 122 குடும்பங்களைச் சேர்ந்த 465 பயனாளிகளுக்கு ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டது. இறுதியாக 'யோக சுவாமி சைவ மகளிர் இல்லத்திற்கும், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை உளநலப்பிரிவிற்கும் சில ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டது.

### 07. பயனாளர் அணுகுமுறை

பயனாளிகள் தமக்கான ஆடைகளை அவர்களது சுயவிருப்பின் அடிப்படையில் அவர்களாகவே பார்த்து தெரிவு செய்தனர். எதுவித நிர்ப்பந்தங்களும் அவர்களுக்கு ஏற்படுத்தப்படவில்லை விஷேடமாக விநியோகத்தின் போது பயனாளிகளை புகைப்படங்களும் எடுக்காமல் எமது பணி மேற்கொள்ளப்பட்டது இதனை பலரும் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர். மேலும் பயனாளிகள் மிகவும் மரியாதையுடனும், அன்புடனும் நடாத்தப்பட்டனர்.

Help Dress செயற்பாட்டுக்கு நல்லுள்ளம் படைத்தவர்கள் பெருமளவு பங்காற்றியிருந்தார்கள். அந்த வகையில் பணமாக 16 நன்கொடை வழங்குனர்களிடமிருந்து 158728 ரூபாய்யும் புதிய ஆடை கொள்வனவுக்காக 13 நன்கொடை வழங்குனர்களிடமிருந்து 504580 ரூபாய் பெறுமதியான ஆடைகளும் பெறப்பட்டு மொத்தமாக 663308 ரூபாய் பெறுமதியான புதிய ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டது. கொரோனா நோய் காரணமாகவும் வறுமை காரணமாகவும் நோன்புப் பெருநாளை புதிய ஆடைகள் கொள்வனவு செய்து கொண்டாட முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு ஆடைகள் வழங்கப்படதால் அவர்கள் பெருநாளை மகிழ்ச்சியாக கொண்டாட முடியுமான நிலைமை உருவாக்கப்பட்டது. இறைவனுக்கே புகழனைத்தும். அந்த வகையில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 465 பயனாளிகள் Help Dress என்ற தன்னார்வ பணி மூலம் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தோடு எமது பணி முடிவடைந்து விடவில்லை எமது அடுத்த கட்ட நகர்வாக " வயீல ளஊாழழட எழடரவெநநசைெ" எனும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாட்டிற்கு உதவக்கூடியவாறு மாணவர்களுக்கு முழுமையான மற்றும் முறையான பாடசாலை சீருடைகளை பெற்றுக்கொள்ள முடியாத வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு உதவுமுகமாக பாடசாலை சீருடையை பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் இப்பணி முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

---

## நான்

ஹீ.எல். எம். என். ஹரீன்

நான்
தலைவர்களை உருவாக்க
மெழுகுதிரியாய்
உருகியவன்.

அரியணை ஏறி
அவர்கள் அரசராயினர்.
அடிக்கடி அங்குமிங்கும்
தாவினர் குரங்குகளாய்
உள்ளுக்குள்ளே வைத்து
என்னை தோற்கடித்தனர்.

அன்பளிப்பாய்
கட்சி மாறா போராளி
என்று பட்டமும் சூட்டினர்
தன்னை எதிர்த்து தேர்தல்
கேட்டதால்
கள்ளப்பட்டம் சூட்டி
தவிசாளர் பதவியிலிருந்து
இறக்கினர்.

மான பங்கப்படுத்தினர்
உயிரோடு என்னை
கொன்றனர்.
வீட்டை உடைத்தனர்
குண்டை வீசினர்
குண்டாந்தடியால் தாக்கினர்.
வீறு கொண்டு எழுந்தேன்
எதிரியை எதிர் கொண்டேன்
மன்றில் வழக்காடி
தவிசாளர் பதவியில்
மீண்டும் அமர்தேன்.




பதவி மோகம் கொண்ட
அரசியல் வாதியை
அல்லாஹ்விடம் ஒப்படைத்தேன்
ஆட்டங் காணத் தொடங்கியது
அத்திவாரம்
தொடர்ந்து இறங்கு முகம்
இன்னும் இறங்கும்
எல்லோரும் கட்சியை
விட்டுச் சென்றனர்

பதவிக்காப் தாவினர்
நான் மட்டும் ஒரே இடத்தில்
இவர்கள் வருவதற்கும்
போவதற்கும்
நான் மட்டும் கட்சியுடன்
சென்றார் திரும்பி வந்தார்
மீண்டும் சென்றார்

இருந்தவர் ஒருவர்
ஒரு வருட தவிசாளர்
பதவிக்காய் எம்மை விட்டுச்
சென்று அவரோடு சேர்ந்து
கட்சியையும் என்னையும்
எதிர்தார்
தோற்பேன் என்று தெரிந்தும்
பாராளுமன்ற தேரதல்
கேட்டேன்

கட்சியை காப்பாற்ற
கடைசியில் கடனாளியானேன்
திட்டமிட்டு என்னை தாவுது
தோற்கடித்தான்
வளவு விற்று
நகை விற்று
லோனெடுத்து
ஓட்டாண்டியானேன்
எட்டப்பர் மாமக்கள்
எம்மோடு நிறைய
இருந்தனர்

போராளிகளை காசிற்கு
விற்க முனைந்தனர்
உள்ளிருந்து குழி பறித்தனர்
என்னை ஓரம் கட்ட ஓயாது
உழைத்தனர்
ஓயவில்லை ஓடி ஒளியவில்லை
நெஞ்சை நிமிர்த்தி
நிமிர்ந்து நின்றேன்
பீனிக்ஸ் பறவையாய்
மீண்டும் பறந்தேன்
பலரும் வந்தனர்

மீண்டும் சென்றனர்
நான் மட்டும் கட்சியுடன்
ஒருவர் வந்தார்
என்னை ஓரங்கட்ட
ஓயாது முனைகிறார்
எட்டப்பர் எல்லாம் அவரோடு சேர்ந்து
அபாண்டங்களை அள்ளி
வீசுகின்றனர்
ஓயமாட்டேன் ஓடமாட்டேன்
ஒதுங்கி ஒளியமாட்டேன்
உச்சம் தொடுவேன்
என் மையத்து ஊர்வலத்தில்
கட்சியின் கொடி
இணைந்து வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களுக்கு சேவை செய்ய...

(6ம் பக்கத் தொடர்)

இவ்வாறான பார்வைக்கு மத்தியில்தான் தான் நான் வேட்பாளராக களமிறங்கும் நிலை உருவானது. இதனால் எனது பிரதானமான கோரிக்கையாக கட்சி தலைமையிடம் இப்பிரச்சினையை முன்வைத்தேன். இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் எமது தலைமை இந்த விடயத்தில் இறுக்கமான, கண்டிப்பான உத்தரவை பிறப்பித்தது. சக வேட்பாளர்களை பகைத்துக்கொண்டு அவர்களின பிரதேசங்களுக்கு விருப்பத்துக்குமாறாக ஏனைய வேட்பாளர்கள் செயற்படக்கூடாது என்ற தலைமையின் உத்தரவை ஏற்றுக்கொண்டுதான் நாம் இந்த தேர்தலில் போட்டியிடுகின்றோம். ஆனால் முன்னாள் முதலமைச்சர் இதனை மீறும் வகையில் அவரது பழைய போக்கில் பிரசாரங்களை எமது பிரதேசத்தில் முன்னெடுத்து வருவது கண்டிக்கத்தக்கது அதனைத்தான் நாம் செய்தோம். ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை எமது பிரதேசத்தில் முன்னெடுத்துச் செல்லும் போது அதனை மலினப்படுத்தி பணத்தையும், பொதிகளையும் கொடுத்து வாக்குகளை பெறுவது ஆரோக்கியமான விடயமல்ல. எனவேதான் எமது கட்சி போராளிகளின் விருப்புக்கு அமைவாக நாம் செயற்பட்டு வருகின்றோம்.

கேள்வி: நீங்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் இப்பிரதேசத்தில் ஒரு சிரேஸ்ட அரசியல்வாதிக்கு நிகராக சேவையாற்ற முடியும் என்று நினைக்கின்றீர்களா?
பதில்: என்னை நோக்கி விடுக்கப்படும் பிரசாரங்களில் இதுவும் ஒன்றாக காணப்படுகின்றது எந்த விடயத்துக்கும் ஒரு ஆரம்பம் இருக்கத்தான் செய்கின்றது யாராக இருந்தாலும் எந்த செயற்பாடாக இருந்தாலும் அது ஆரம்பத்தில் இருந்துதான் தொடங்கப்படுகின்றது. அந்தவகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கும் இது பொருந்தும் அவர் முதன்முதலாக தேர்தல் கேட்ட போது இப்படியான கேள்விகள் அவருக்கு எதிராக கேக்கப்பட்டது அப்படியிருந்தும் அந்த கேள்விகளை எமது பிரதேச மக்கள் நிராகரித்துதான் சுமார் 24000 க்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளை மக்கள் வழங்கினார்கள். அன்று மக்கள் சிரேஸ்ட அரசியல்வாதிக்குதான் அனுபவமான அரசியல்வாதிக்குதான் வாக்குகளை வழங்குவோம் என்ற முடிவை எடுத்திருந்தால் அமீர் அலி என்ற பெயர் இன்று சீனிலே இருந்திருக்காது என்பதை ஞாபகப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

எனவே, அரசியல் செய்வதற்கு வயதையோ, அனுபவத்தையோ விட திறமையும், புத்திசாலித்தனமும்தான் தேவையென்று நினைக்கின்றேன். ஒரு பாராளுமன்ற ஆயுட்காலத்தில் அம்மக்களுக்கு திருப்தியான சேவையை வழங்கமுடியும் என்ற அடிப்படையில்தான் அப்பதவிக்கான விசேட ஏற்பாடுகள் இலங்கை அரசியலில் செய்யப்பட்டுள்ளது. இந்த காலப்பகுதிக்குள் எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள சகல விடயங்களையும் இறைவனின் துணையுடன் அடைந்துவிடுவேன். இந்த காலப்பகுதிக்குள் அடுத்த கட்ட தலைமைத்துவத்திற்கான பணிகளை செல்வதுதான் எனது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. ஆண்டுக்கணக்காக, தசாப்தங்களாக இதனை ஒரு தொழிலாக செய்யாது இப்பதவியை எமது

### மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவம் :

ஈஸ்டர் தற்கொலை தாக்குதலை தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலின் பின்னரான காலம் இலங்கையில் இனவாதம் மேலோங்கியுள்ளதை நாம் அவதானிக்கலாம். அந்தவகையில் இனவாதத்தின் தாக்கம் நாடு முழுவதும் வியாபித்துள்ள நிலையில்தான் தற்போது பாராளுமன்ற தேர்தல் நடைபெறுகின்றது. எனவே, இந்த இனரீதியான பார்வை மட்டக்களப்பு மாவட்டத்திலும் செல்வாக்கு செலுத்தும் என்பதை குறைத்து மதிப்பிட முடியாது. மட்டக்களப்பு மாவட்டதிதில் மூன்றாவது ஆசனத்தை கைப்பற்றுவதில் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒரு முக்கோண போட்டி நிகழும் என்பதை நாம் எதிர்வுகூறலாம்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பிரதேசத்தில் சூடுபிடித்துள்ள இந்த போட்டி கட்சிக்குள்ளயும் கட்சிகளை கடந்தும் காணப்படுகின்றது.இதில் யார் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு அதிகம் உள்ளது என்பதை அறிவதற்கு "கட்சியின் பங்களிப்பும் அபேட்சகரின் செல்வாக்கும்" என்ற இந்த இரண்டு அம்சத்திலும் யார் முன்னணி வகிக்கின்றாரோ அவர்தான் மட்டக்களப்பில் தெரிவாகும் முஸ்லிம் பிரதிநிதியாக காணப்படுவார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அண்மித்த வாக்குகளை பெறுகின்ற போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆசனங்கள் இரண்டுக்குள்பிரதேசத்திலுள்ள ஏனையவர்களும் அடைய வேண்டும் என்பதற்கான ஏற்பாடுகளை செயற்பாட்டில் செய்துகாட்டுவேன்.

மட்டுப்படுத்தப்படும். அவ்வாறு இடம் பெற்றால் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் இரண்டாவதற்கான சாத்தியப்பாடுகளும் இல்லாமலில்லை. எனவே, முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை ஒன்றா? அல்லது இரண்டா? என்பதை தீர்மானிக்கும் கட்சியாக நாம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை அவதானிக்கலாம்.

கேள்வி: இத்தேர்தல் தொடர்பில் நீங்கள் மக்களுக்கு விடுக்கும் செய்தி என்ன?
பதில்: இந்த தேர்தல் முஸ்லிம் சமூகத்தைப் பொருத்தவரை ஒரு முக்கியமான தேர்தலாக காணப்படுகின்றது. முஸ்லிம்களின் மார்க்க விடயங்களில் அவர்களின் எதிர்கால இருப்பு சம்மந்தப்பட்ட விடயங்களில் சவால் நிறைந்த காலமாக எதிர்வரும் காலங்கள் இருக்கப் போகின்றது என்பதை அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி வருகின்றார்கள். இந்த விடயங்களை புத்திசாதுாரியமாக கையாள்வதில்தான் எமது சமூகத்திற்கு விமோசனம் இருக்கின்றது. சண்டித்தனம் காட்டி, பேசக்கூடாத விடயங்களை பேசி நிலைமைகளை இன்னும் மோசமாக மாற்றும் நபர்களுக்கு வாக்களிப்பதை விடுத்து பெரும்பான்மை மக்களின், ஆட்சியாளர்களின் புரிந்துணர்வுகளுடன் எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை எட்ட முனையும் நபர்களுக்கு வாக்களிக்க வேண்டும். அந்த வகையில் விசேடமாக எமது கல்குடா தொகுதியில் முன்னாள் இராஜாங்க அமைச்சரை விடுத்து புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க போட்டியிடும் எனக்கு வாக்களிப்பதில்தான் கல்குடா மக்களுக்கு விமோசனம் இருக்கின்றது. முன்னாள் இராஜாங்க அமைச்சரின் கடந்த கால செயற்பாடுகள் தேசிய அரசியல்வாதிகளிடத்தில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் புதிய முகங்களை தேசிய அரசியல்வாதிகள் எதிர்பார்க்கின்ற நிலையில் இத்தேர்தலில் தான் தெரிவு செய்யப்பட்டால் மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் எமது பிரதேசத்தில் நீண்டகாலமாக இருந்துவரும் காணி, எல்லை பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண்பது எனது பிரதான நோக்கமாகும். இதுதவிர எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களில் பெரும்பாலான விடயங்களுக்கு என்னை தெரிவு செய்யும்போது தீர்வினை பெற்றுக்கொள்ள ஏதுவாக அமையும் என்ற வகையில் இம்முறை பொதுத்தேர்தலில் எமது கல்குடா மக்கள் ஒன்றுபட்டு வாக்களிக்க வேண்டிய தேவையை சமகால அரசியலில் உருவாக்கியுள்ளது.

## 2020 பொதுத் தேர்தலும்...

(3ம் பக்கத் தொடர்)

பரவலான வாக்குகளை பெற்று காத்தான்குடி பிரதேசத்தில் அளிக்கப்படும் வாக்கில் 64 வீதத்திற்கும் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் போது இக்கட்சியின் வெற்றி உறுதிப்படுத்தப்படும். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் பரவலான வாக்குகளை பெற்றுக்கொள்ளும்அரசியல்வாதியாக நாம் கலாநிதி ஹிஸ்புல்லாஹ்வை அவதானிக்கலாம்.

அதேபோன்று ஏறாவூர் , கல்குடா, மற்றும் மாவட்டத்தில் உள்ள தமிழ், சிங்கள் வாக்குகளை பெற்றுக்கொள்ளும். போது ஐக்கிய சமாதான கூட்டமைப்பு நானகாவது ஆசனத்தை கைப்பற்றும் இவ்வாறான நிலை ஏற்பட்டால் ஏனைய கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி போன்றவை ஆசனங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலை காணப்படும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி ஆகிய இரு கட்சிகளும் தனிப்பட்ட ஆளுமையுள்ள அல்லது குறிப்பிட்ட மக்கள் செல்வாக்குள்ள வேட்பாளர்கள் இல்லாத காரணத்தினால் இக்கட்சிகள் இரண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றி பெருவதற்கான வாக்குகளை பெற முடியாத நிலைமையே காணப்படுகின்றது. இதனால் இக்கட்சிகள் பற்றிய விரிவான பார்வையை நாம் இங்கு செலுத்த வில்லை.

## ஓட்டமாவடி பிரதேச சபை

(6ம் பக்கத் தொடர்)

ஆனால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் தவிசாளர் பதவி தொடர்பில் கட்சிக்குள்ளேயே காணப்பட்ட இழுபறிகளை களைந்து ஆட்சியமைப்பதற்கு தவிசாளர் பதவியை அக்கட்சியின் உறுப்பினர்களான ஐ.ரீ. அஸ்மி மற்றும் ஏ.எம்.நௌபர் ஆகியோர்களுக்கு இரு பகுதிகளாக வழங்குவதாக முடிவு எட்டப்பட்டது. இதற்கான உடன்படிக்கை முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலியின் தலைமையில் இடம்பெற்றது. தவிசாளரின் முதலாவது பதவிக் காலத்திற்காக கடந்த 06.04.2018 ஆம் திகதி ஐ.ரீ. அஸ்மி நியமிக்கப்பட்டார்.ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் படி முதலாவது தவிசாளர் பதவி காலம் கடந்த 06.04.2018 ஆம் திகதி நிறைவு பெற்றது. எனவே, உடன்பாட்டில் குறிப்பிடப்பட்ட படி இரண்டாம் கட்ட தவிசாளர் பதவி உறுப்பினரான ஏ.எம். நௌபருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவரது ஆதரவாளர்கள் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. மீராவோடை சமூகம் குறிப்பாக

மாஞ்சோலை மக்கள் இந்த விடயம் தொடர்பில் கடுமையான நிலைப்பாட்டில் கருத்துக்களைமுன்வைத்து வந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனால் மாற்றுத்தரப்பினர் தவிசாளர் பதவியை ஏ.எம். நௌபருக்கு வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது. இந்நிலையில் தவிசாளரின் இரண்டாவது பதவி என்ற விடயம் கல்குடா அரசியலில் சூடாக விவாதிக்கப்பட்டது.எனவே, இவ்வாறான நிலைமைகளின் பின்புலத்தை அவதானித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி இந்த விடயம் தொடர்பான ஊடக சந்திப்பினை கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி ஏற்பாடு செய்து மக்களுக்கு உடன்படிக்கை தொடர்பான விளக்கங்களை தெளிவுபடுத்தினார்.
நாட்டில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் ஏப்ரலில் தேர்தல் நடைபெற்றால் தேர்தலுக்கு முன் அஸ்மி தவிசாளர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும் தேர்தல் திகதி பிற்போடப்பட்டால் பிற்போடப்படும் தினத்துக்குள் தவிசாளர் பதவியிலிருந்து விலகிஅப்பதவியினை உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல் ஏ.எம். நௌபருக்கு வழங்க வேண்டும் என முன்னாள் இராஜாங்க அமைச்சர் தெளிவுபடுத்தினார் அத்தோடு தவிசாளர் பதவி விலகியதிலிருந்து ஒரு புதிய தவிசாளர் பதவி ஏற்க சுமார் 6 வாரங்கள் எடுக்கும் அவ்வாறுதான் உள்ளூராட்சி சட்டங்கள் உள்ளது போன்ற விடயங்களை மேற்படி ஊடக நிகழ்வில் மக்களுக்கு தெளிவுபடுத்தி தவிசாளர் தொடர்பான குழப்ப நிலைக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் முற்றுப்புள்ளி வைத்தமை குறிப்பிடத்தக்கது.இதற்கமைவாக ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் கடந்த திங்கட்கிழமை தவிசாளர் ஐ.ரீ அஸ்மி அப்பதவியிலிருந்து விலகினார். அதற்கமைய இரண்டு வருட சேவை முடிவடைந்ததையிட்டு தவிசாளர் பதவியினை இராஜினாமா செய்யும் நிகழ்வும், சபையின் செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து தற்போது பதில் தவிசாளராக எம். அஹமட் பதவி வகித்து வருகின்றார்.

ஆறு வாரங்களின் பின் புதிய தவிசாளராக ஏ.எம் நௌபர் பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.எனவே, தவிசாளர் நியமனம் உள்ளூராட்சி மன்றங்களின் சட்டங்களுக்கு அமைய இடம்பெரும் என்ற விடயமும் தற்போது விவாதிக்கப்படுவதை நாம் அவதானிக்கலாம். எப்படியிருந்த போதும் ஏ.எம். நௌபர் தவிசாளராக நியமிக்கப்பட்டால் மீதி இருக்கும் இரண்டு வருடகாலப்பகுதிக்குள்ளே அவர் இப்பிரதேச மக்களுக்கான சேவையை செய்து மீண்டும் சபையில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டிய பலப்பரீட்சைக்கான ஒரு ஏற்பாடாக தவிசாளர் பதவியை குறிப்பிட முடியும். தனிப்பட்ட நபர்களை திருப்திபடும் ஒரு பதவியாக தவிசாளர் பதவி போய்விடக்கூடாது என்பது இங்குள்ள மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தவிசாளர் பதவியின் அரைவாசி காலத்திற்குள் வினைத்திறனான சேவையை மக்களுக்கு வழங்கமுடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகும். கடந்த காலங்களில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் வளங்கள் மூலம் மக்கள் உச்சபயனடைந்ததாக குறிப்பிட முடியாதுள்ளது. பிரதேச சபை என்பது அப்பிரதேசத்தில் உள்ள ஒரு குட்டி அரசாங்கமாகும். மக்களின் பௌதீக வளங்களில் மாத்திரம் பணியாற்றுவதை விடவும் சகல விடயங்களிலும் பிரதேச சபையின் ஆதிக்கம் பேணப்பட வேண்டும். புதிய சிந்தனைகளுடன் கூடிய திறமை கொண்டவர்களாக தவிசாளர்கள் காணப்பட்டால் இப்பிரதேசத்தை ஒரு முன்மாதிரியான பிரதேசமாக மாற்றியமைக்கலாம்.

எனவே, புதிதாக நியமிக்கப்படவுள்ள தவிசாளார் தான் ஒரு குட்டி அரசாங்கத்தை ஏற்படுத்தப்போகிறேன் என்ற மனப்பதிவடன் தனது பணியை முன்னெடுக்க வேண்டும். கடந்த காலங்களில் செயற்பட்ட தவிசாளர்களையும் விடவும் கூடுதலாக சேவைகளையும், மக்கள் நல திட்டங்களையும் புதிய தவிசாளர் முன்னெடுப்பார் என்ற எதிர்பார்ப்பு இங்குள்ள மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இவ்வாறான பின்புலங்களை புரிந்து கொண்டு பிரதேச சபைக்கான சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை புதிய தவிசாளருக்கு உண்டு.

## அமையவுள்ள பாராளுமன்றத்தில்...

(7ம் பக்கத் தொடர்)

பதில்: ஆம் மர்ஹூம் முஹைறத்தீன் அப்துல் காதர், ஹிஸ்புல்லாஹ் போன்றவர்களின் காலத்தில்தான் இந்த அநியாயம் நடந்தது. அப்போது முன்னாள் ஆளுனர் ஹிஸ்புல்லாஹ் பிரதியமைச்சராக இருந்தார் பெரும்தலைவர் மர்ஹூம் அஸ்ரப் அவர்களின் பணிப்புரையின் பெயரிலே ஹிஸ்புல்லாதான் இந்த வேலைதிட்டத்தை முன்னெடுத்திருந்தார். வாழைச்சேனை சமூகம் தனக்கு வாக்களிக்கும் என்ற வகையில் அவசர, அவசரமாக ஹிஸ்புல்லாஹ்வினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு வேலைதிட்டம்தான் இது. ஒரு மாவட்டத்தின் தலைமை என்றவகையில் அது காத்தான்குடியாக இருக்கலாம், ஏறாவூராக இருக்கலாம், கல்குடா தொகுதி அரசியல் தலைமையாக இருக்கலாம் அது யாராக இருந்தாலும் இவ்வாறான பெரிய வேலைத்திட்டங்கள் செய்கின்ற போது அம்மாவட்ட மக்களின் எதிர்கால இருப்பையும், அபிலாசைகளையும் உள்ளடக்கியதாகவே இருக்க வேண்டும். ஹிஸ்புல்லாஹ் அதில் தவறிவிட்டார். எனவே, அவசரப்பட்டு கொடுப்பது, எடுப்பது என்பதில் பிரயோசனமில்லை. கொடுத்துவிட்டோம் ஆனால் எடுக்க வில்லை. இந்த விடயத்தில் தூரப்பார்வை இல்லாமல் போய்விட்டது. என்ற கவலை என்னிடமுள்ளது. அந்த நேரத்திலே பிரிப்பை விடவும் இழக்கப்படும் என்ற அபாயம் இருந்திருந்தால் அதனை மாற்று வழிமுறைகளினுடாக செய்திருக்க முடியும் அதற்கான சாத்தியப்பாடுகள் இருந்தும் அது செய்யப்படவில்லை என்பதே எனது குற்றச் சாட்டாகும்.

கேள்வி : இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் இறுக்கமான நிலைப்பாட்டை கடைப்பிடிப்பதான ஒரு பார்வை இருக்கின்றது இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?
பதில்: நான் இப்பிரச்சினை தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசியல் தலைமைகள், பிள்ளையான், கருணா போன்றவர்களிடம் எடுத்தியம்பியுள்ளேன். அனேகமான அரசியல் தலைவர்கள் இதில் தெளிவு காண்கின்றார்கள். தமிழர்களின் போராட்டமும் மண்ணை மீட்க வேண்டும் என்ற போராட்டமாகத்தான் ஆரம்பித்தது. எனவே, அவர்களின் மீட்பு போராட்டத்தில் தீர்வு காணாத நிலையிலே இன்னுமொரு சமூகத்திற்கு இதனை பிரித்துக் கொடுப்பதை பயப்படுகின்றார்கள். அவர்கள் சார்ந்த சமூகம் தங்களை துரோகிகளாக காட்டிவிடுவார்கள் என்று பயப்படுகின்றார்கள். இந்த விடயத்தை அவர்களுக்கு மத்தியில் அதாவது தமிழ் அரசியல் தலைமைகளையும், மக்களையும் நாம் நியாயப்படுத்தல் செய்ய வேண்டியுள்ளது. தமிழ் அரசியல்வாதிகளுக்கு இதனை செய்திருக்கின்றேன் ஒரு சில அரசியல் தலைவர்களுக்கும்தமிழ் உறவுகளுக்கும் இதனை செய்ய வேண்டியுள்ளது இந்த விடயத்தில் தமிழ் அரசியல் தலைமைகளின் சம்மதத்துடன்தான் இவை களை செய்ய முடியும். எதிர்காலத்தில் அதனை செய்யவுள்ளேன். இந்தப்பணி எல்லோருக்குமுரியது கட்சிகளை கடந்து இந்த விடயங்களை கையாள வேண்டும்.

கேள்வி : மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது இந்த போதைப்பொருள் பாவனையை ஒழிக்கவுள்ளதாக நீங்கள் குறிப்பிட்டு வருகின்றீர்கள் போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதற்கு நீங்கள் கையாளவுள்ள உபாயங்கள் என்ன?
பதில் :
போதைப்பொருள் பாவனையை ஒழிக்க வேண்டும் என்பதில் பல இலட்சக்கணக்கான நிதிகளை கடந்த காலத்தில் எனது அமைச்சு மூலம் ஒதுக்கியுள்ளேன். இதன்னுாடாக விழிப்புணர்வு கருத்தரங்குகள், மகாநாடுகள் போன்றவற்றை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மூன்று தொகுதிகளிலும் நடாத்தியுள்ளேன். அதேபோன்று இளைஞர்களை போதைப்பொருள் பாவனையிலிருந்து தூரப்படுத்தும் முகமாக உடற்பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளேன். எதிர்காலத்தில் போதைப்பொருள்பாவனையாளர்களை அதிலிருந்து மீட்பது என்பதிலும் புதிதாக போதைப்பொருள் பாவனைக்கு ஆட்படாமல் தடுப்பது என்பதிலும் கவனம் செலுத்தியுள்ளேன். போதைப்பொருள் பாவனைக்கு உள்ளானர்வர்களுக்கு புனர்வாழ்வளித்து மீண்டும் அவர்களை சமூகத்திடம் ஒப்படைக்கும் பணியை செய்ய வேண்டும். எமது கட்சியின் சுமார் 1400 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இருக்கின்றார்கள் எதிர்காலத்தில் இந்த ACMC Youth அமைப்பினரையும் போதைப் பொருட்களுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம்.

கேள்வி : இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது?
பதில் : இந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை பொருத்தவரை சஜித் பிரமதாச அவர்களை இந்நாட்டின் பிரதமராக ஆக்க வேண்டும் என சிறுபான்மை மக்கள் எதிர்பாக்கின்றார்கள். அதேபோன்று பெரும்பான்மை பௌத்த மக்களிடையே ஒரு வேதனை இருக்கின்றது ஒரு நல்ல பௌத்தரை தோல்வியடைய செய்து விட்டோம் என்ற மனப்பதிவு பெரும்பான்மை பௌர்தர்களிடம் காணப்படுகின்றது. அதேபோன்று பெரும்பான்மை இனத்தவர்களின் நடுநிலைமையானவர்கள் சிந்திக்கின்றார்கள் ஒரு நேர்மையான கரைபடியாத நல்ல மனிதரை பிரதமராக தெரிவுசெய்ய வேண்டுமென எனவே, அது வெற்றி பெரும் என நம்புகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை பொதுத்தேர்தலில் 70 தொடக்கம் 85 வரையான ஆசனங்களை பெற்றுக் கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவும் முஸ்லிம் இனவெறுப்பு...

08ம் பக்கத் தொடர்ச்சி...

அடுத்த நாள் புதிய சுற்றுநிபம் வெளியிடப்பட்டு புதைக்க முடியாது தகனம் மாத்திரம்தான் செய்ய முடியும் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டு ஏப்ரல் முதலாம் திகதி அது தொடர்பான வர்த்தமானி ஒன்றும் வெளியிடப்பட்டது. கொரோனா மரணத்தை இலங்கையில் தகனம்தான் செய்ய முடியும் மாறாக புதைக்க முடியாது என்ற விஞ்ஞான ரீதியாக நிறுபிக்கப்படாமல் வெறுமனே விரைவாக தகனம் செய்து அதனை ஒளிபரப்புச் செய்தமை போன்ற விடயங்கள் முஸ்லிம் இனவெறுப்பு அரசியலின் நிகழ்ச்சி நிரலாகவே பார்க்கப்படுகின்றது. அரசாங்க வைத்தியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூட சுகாதார பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் இலங்கையில் கொரோனா மரணத்தை உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலுக்கு அமைய புதைக்க முடியும் என்று சுட்டிக்காட்டி இது தொடர்பில் ஒரு நிபுணர் குழுவை நியமித்து அதன்படி இறுதிக்கிரிகைகளை செய்யுமாறு சுகாதார பணிப்பாளரை வலிவுறுத்திய போதும் அதற்கான பெறுபேறுகள் இது வரைக்கும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினை கண்டறிய மேற்கொள்ளப்பட்ட 13 பி.சி.ஆர் மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் தவறாக வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவ ஆய்வக விஞ்ஞானக் கல்லூரியின் தலைவர் ரவி குமுதேஸி குறிப்பிட்டமையானது கொரோனா தொடர்பில் அரசாங்கம் வழங்கும் வைத்திய முறைமையிலும் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆய்வு கூடத்தின் ஊடாக 8 பி.சி.ஆர். மருத்துவ அறிக்கைகளும், கொழும்பு பல்கலைக்கழக ஆய்வு கூடத்தின் மூலம் 4 பி.சி.ஆர். மருத்துவ அறிக்கைகளும், கொத்தலாவை பாதுகாப்பு பல்கழைக்கழகத்தின் ஊடாக வழங்கப்பட்ட 1 பி.சி.ஆர். மருத்துவ அறிக்கை அடங்களாக தாம் பரிசோதித்த வகையில் சுமார் 13 பி.சி.ஆர். மருத்துவ அறிக்கைகள் பிழையாக வழங்கப்பட்டுள்ளதாக ரவி குமுதேஸி தமது அறிக்கையில் குறிப்பிட்டார். கடந்த மே மாதம் 5 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 4 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக கூறப்பட்டது.

அதில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தாதி, கொலன்னாவ பகுதியை சேர்ந்தவர், ராஜகிரிய பண்டாரநாயக்கபுர பகுதியை சேர்ந்தவர், மற்றும் மோதரை பகுதியைச் சேர்ந்த 52 வயதான முஸ்லிம் பெண் அடங்களாக நால்வருக்கு கொரோனா தொற்று இருப்பதாக கொழும்பு பல்கலைக்கழக ஆய்வு கூடத்தினால் வழங்கப்பட்ட பி.சி.ஆர். மருத்துவ அறிக்கைகள் பிழை என இலங்கை மருத்துவ ஆய்வக விஞ்ஞானக் கல்லூரியின் தலைவர் ரவி குமுதேஸி குறிப்பிட்ட மறுநாள் சுகதார சேவைகள் பணிப்பாளர் பாதிக்கப்பட்டோர் பட்டியலில் இருந்த மூவரின் பெயரை நீக்கியதாக அறிவித்தார். எனினும் மரணமடைந்த மோதரை பகுதியைச் சேர்ந்த 52 வயதான முஸ்லிம் பெண்ணின் பெயர் அப்பட்டியலில் இருந்து இதுவரையும் நீக்கவில்லை அப்பெண் கொரோனாவினால் உயிரிழந்ததாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கொரோவாவை வைத்து முஸ்லிம்கள் மீதான இனவெறுப்பு பிரசாரங்கள் தீவிரப்படுத்தப்பட்டு முஸ்லிம்களின் சமூக கடமைகளுக்கு முடிச்சிப்போட்டு செயற்பட்ட விதம் மீண்டுமொரு ஈஸ்டர் குண்டுதாக்குதலின் பின் முஸ்லிம்கள் சந்தித்த மிக மோசமான மதநிந்தனையாக இந்த அம்சம் பார்க்கப்படுகின்றது. ஏனைய நாடுகள் கொரோனா தொடர்பில் முஸ்லிம்கள் தொடர்பில் கடைபிடித்த அம்சங்களிலிருந்து இலங்கை அரசாங்கம் விலகியிருந்தமை அரசியல் ரீதியான பழிவாங்களாகவே பார்க்கப்படுகின்றது. இந்தியாவில் கூட கொரோனா மரணங்கள் புதைப்பதற்கு அனுமதி வழங்கிய போதும் எமது நாட்டில் அது அரசியல் ரீதியான இனவெறுப்பு பிரசாரமாக மாற்றப்பட்டதுக்கு தேர்தல் காலமும் ஒரு வாய்ப்பாய் போய்விட்டது.

## தொல்பொருள் ஆராய்ச்சிக்கான

5ம் பக்கத் தொடர்ச்சி...

இதனைத்தொடர்ந்து இச்செயலணியிலுள்ள எல்லாவ மேதானந்த தேர் திருகோணமலையிலுள்ள திருகோணேஸ்வரம் கோயிலானது சிங்களவர்களின் கோகண்ண விகாரை என குறிப்பிட்டு இப்பிரதேசம் தொல்பொருள் திணைக்களத்துக்குள் கொண்டுவரப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும் என கூறியிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி அல்லது பௌத்த அடையாளங்களை பாதுகாத்தல் என்ற போர்வையில் கிழக்கில் பௌத்தத்தை நிலைநிறுத்தி அதன் மூலம் பெரும்பான்மை சமூகத்தை குடியமர்த்தும் அரசியல் நிகழ்ச்சி நிரல் காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் கடைபிடிக்கும் விடயமாக காணப்படுகின்றது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்திலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதை நாம் அவதானிக்கலாம். இதனால் 2019 ஆம் ஆண்டு மைத்திரி- ரணில் அரசாங்கம் பதவியில் இருந்த போது இலங்கைத் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் வடக்குக் கிழக்கில் ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, துறைசார்ந்த தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகளையும் உள்வாங்க வேண்டுமெனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது அந்த தீர்மானம் புதிய அரசாங்கத்தின் வரவோடு காணாமல் போய்விட்டது.கடந்த 2018 ஆம் ஆண்டு இறக்காமம் மாயக்கல்லி மலைப் பிரதேசத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்காக முஸ்லிம்களின் காணிகளை சுவீகரிக்கும் முயற்சிகள் இடம்பெற்றிருந்தன. இதற்கான எதிர்ப்புக்கள் முஸ்லிம்களிடமிருந்து வெளிப்பட்டதனால் அம்முயற்சி கைவிடப்பட்டிருந்தது. திருகோணமலை மாவட்டத்திலும் இவ்வாறான சம்பவங்கள் நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்றது. தற்போது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண தொல்பொருள் ஆராய்ச்சி செயலணியின் உறுப்பினர்களில் ஒருவரான பனமுரே திலகவன்ச தேரரினதலைமையில் 2014 ஆம் ஆண்டு புல்மோட்டை அரிசிமலையில் புனிதபூமித் திட்டத்தின் கீழ் தோட்டக் காணிகளை அபகரிக்க முற்பட்டபோது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர் இதனால் அப்போது அத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கத்தினால் பனமுரே திலகவன்ச தேரருக்கு முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டு புல்மோட்டை அரிசிமலையில் புனிதபூமித் திட்டம் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. முஸ்லிம்களை இலக்கு வைத்துதான் இவ்வாறான செயலணிகள் நிறுவப்பட்டுள்ளன மாறாக தமிழர்களுக்கு இதனால் பாதிப்புக்கள் இல்லை என்ற மனநிலையில் தமிழர்கள் இந்த விடயத்தை கண்டும் காணாமல் இருந்து விடுவது புத்திசாலித்தனமல்ல. தமிழர்கள் இந்த விடயத்தை தூக்கிப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என சில தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுவது போன்ற நிலைமையல்ல திருகோணமலை மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களை உற்றுநோக்கும் போது இது புலனாகின்றது. திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பிரதேசத்திலும் புத்த தாதுக் கோபுரம் ஒன்றை நிறுவுவதில் கடந்த ஆண்டு சர்ச்சை ஏற்பட்டிருந்துத. இப்பிரதேசத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து பௌத்த பிக்கு ஒருவர் தங்கியிருந்து பௌத்தர்களின் அடையாளச் சுவடு என உரிமை கோரி வருவதை அவதானிக்கலாம். இதற்கிடையில் கன்னியா வெந்நீருற்றுப் பிரதேசம் தமிழ் மக்களின் பூர்விக வழிபாட்டுப் பகுதியாக மரபுரீதியாக இருந்து வரும் உண்மை மறைக்கப்பட்டு இப்பிரதேசம் பௌத்தர்களுக்கு உரித்தானது என்ற அடிப்படையில் செயற்பட்டு வருவதை எதிர்த்து பல தமிழ் அமைப்புக்கள் கண்டனங்களை வெளியிட்டு அது தொடர்பாக நீதி கேட்டு தற்போது வழக்குப் பதிவும் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தில் பல சம்பவங்கள் தமிழர்களுக்கு எதிராக கடந்த காலங்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம். "அரிப்பு" என்ற தமிழ்க் கிராமமே தற்போது "சேருநுவர" என்ற சேருநுவர பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டே சிங்களக் குடியேற்றதிட்டங்கள், புனித பூமித் திட்டங்கள் என்பன முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சிங்களப் பெயராக மாற்றப்பட்டதாக தமிழர்கள் குறிப்பிடுகின்றார்கள். வெருகல் பிரதேச செயலகத்திலிருந்துதான் சேருநுவரபிரதேச செயலகம் பிரிக்கப்பட்டது. இங்கு சிங்கள மக்களைக் குடியேற்றும் நோக்கில் அமைக்கப்பட்ட சேருநுவர பிரதேச செயலகத்தில் 16 கிராம சேவையாளர் பிரிவுகளை கொண்டதாக காணப்படுகின்றது.

இதேபோன்று "இலங்கைத்துறை" என அழைக்கப்படும் முகத்துவாரம் என்ற தமிழ்க் கிராமம் அழிக்கப்பட்டு தற்போது இக்கிராமம் "லங்காபட்டுன" என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. அத்தோடு புனித பூமித் திட்டத்தின் கீழ் "லங்காபட்டுன சமுத்திரகிரி" என்கிற பௌத்த விகாரை கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியை அண்மித்துள்ள "வாழைதோட்டம்" என்ற தமிழ் கிராமமும் "கிசல்கேடோவதா" என்ற சிங்களப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசங்களில் பாரம்பரியமாக தமிழ் மக்கள் வழிபட்டு வந்த ஆலயங்கள் அழிக்கப்பட்டு அதற்கு பதிலாக பௌத்த விகாரைகள் உருவாக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம் அந்த வகையில் குஞ்சிதபாத மலை பாலமுருகன் ஆலயம் அழிக்கப்பட்டு லங்காபட்டுன சமுத்திரகிரி என்ற விகாரையும் நீலியம்மன் ஆலயம் அழிக்கப்பட்டு பஸனா பப்பாதராஜமஹா என்கிற பௌத்த விகாரையும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர்களின் காணிகளும் வழிபாட்டு தளங்களும் அழிக்கப்பட்டுள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தை இலக்கு வைத்து நிறுவப்பட்டுள்ள மேற்படி செயலணி தனியே முஸ்லிம் மக்களை மாத்திரம் இலக்காகக் கொண்டதாகக் கருதி தமிழர்கள் இதன் வலியை அறிந்தவர்களாக இருந்தும் இவ்விடயத்தில் அமைதி காப்பதென்பது "அறிந்தறிந்து செய்கிற பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்" என்ற நிலைக்கு எதிர்காலத்தில் சென்று விடாமல் இரு சமூகமும் ஒன்றுபட்டு தங்களது இருப்புக்களை கிழக்கு மாகாணத்தில் நிலைநாட்ட வேண்டிய தருணமாக இக்காலப்பகுதி காணப்படுகின்றது.

## பிரதிநிதித்துவ அரசியல்...

4ம் பக்கத் தொடர்ச்சி

அதில் ஒருவர் ராஜினாமா செய்ய அவ்விடத்துக்கு தமிழர் ஒருவர் இடம்பெற்றார். அதேபோல் "கொடிநிலமே" என்பவர் ராஜினாமா செய்ய அவ்விடத்தை "கபீர் காசீம் அலங்கரித்தார். இது தவிர தேசிய பட்டியலினூடாக 07 பேர் பாராளுமன்றம் நுழைந்தனர். 23 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்று பேர் அமைச்சர்களாகவும், நான்கு பேர் பிரதி அமைச்சர்களாகவும், ஒருவர் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளராகவும் நியமிக்கப்பட்டனர். 2000ஆம் ஆண்டு 10வது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க வாக்களித்துவிட்டு வரும் போது மரணமடைந்து விட்டார். இத்தேர்தலில் பல முஸ்லிம் கட்சிகள் போட்டியிட்டன. நாடளாவிய ரீதியில் போட்டியிட்ட 144 பெண்களில் 7 முஸ்லிம் பெண்கள் போட்டியிட்டதோடு இருவர் தேசிய பட்டியலிலும் இடம் பெற்றனர். பொதுவாகவே இலங்கையில் பெண்களின் அரசியல் பிரவேசம் குறைவாகவே காணப்பட்ட போதிலும் 1947ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்ட ஆயிசா அப்துர் ரஊப் என்பவரே பாராளுமன்றத்தில் போட்டியிட்ட முதல் முஸ்லிம் பெண்ணாவார். என்ற போதும் அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவில்லை. ஆயினும் பின்னர் கொழும்பு மாநகர பிரதி மேயராக கடமையாற்றியுள்ளார். 2000ஆம் ஆண்டு தேர்தலில் 16 முஸ்லிம் அங்கத்தவர்கள் தெரிவானார்கள். தேசிய பட்டியல் மூலம் ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர். மொத்தமாக 23 முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தனர். மக்கள் விடுதலை முன்னணி சார்பில் தேசிய பட்டியலினூடாக திருமதி அன்ஜான் உம்மா பாராளுமன்றத்திற்கு தெரிவான முதல் முஸ்லிம் பெண் என்ற அந்தஸ்தை பெற்றதுடன் 2000 செப்டம்பர் 16ல் இடம் பெற்ற ஹெலிகெப்டர் விபத்தில் அஸ்ரப் மரணிக்க அவரது பாரியார் பேரியல் அஸ்ரப் தெரிவானார் இவர்கள் இருவரும் பாராளுமன்றம் நுழையும் முஸ்லிம் பெண் பிரதிநிதிகள் என்ற சாதனையை நிலைநாட்டியதோடு பேரியல் அஸ்ரப் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டு மேலும் ஒரு சாதனையை நிலைநாட்டினார். இவ் அமைச்சரவையில் 4 முஸ்லிம் அமைச்சர்கள் 4 முஸ்லிம் பிரதி அமைச்சர்களும் காணப்பட்டனர். 2000ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பாராளுமன்றம் 2001ம் ஆண்டு கலைய வேண்டியேற்பட்டது. ஐக்கிய தேசிய கட்சி கூட்டணி ஆட்சியமைத்து அதாவது ஜனாதிபதியாக சந்திரிக்காவும், பிரதமராக ரணில் விக்ரமசிங்கவும் பதவி வகித்தனர். 18 முஸ்லிம் பிரதிநிதிகள் தேர்தல் மூலமும் 8 பேர் தேசிய பட்டியல் மூலமும்மாக 26 முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் நால்வர் அமைச்சர்களாகவும் ஐந்து பேர் செயற்திட்ட அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டதோடு அப்போது மொத்தமாக தெரிவான 10 பெண் உறுப்பினர்களுள் அஞ்சான் உம்மா, பேரியல் அஸ்ரப் ஆகியோர் முஸ்லிம்கள் சார்பாக தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்றம் நுழைந்தனர்.ஜனாதிபதி பிரதமருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 2004ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இதனால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு என்ற கட்சி ஏற்படுத்தப்பட்டு இக்கட்சி தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியை கைப்பற்றியது. இத்தேர்தலில் 11 முஸ்லிம்கள் வெற்றியீட்டினர். இவர்களுள் அஞ்சான் உம்மா, பேரியல் அஸ்ரப் ஆகியோரும் அடங்குவர். 12 முஸ்லிம் அங்கத்தவர்கள் தேசிய பட்டியலின் ஊடாக பாராளுமன்றம் தெரிவாகினர் இந்த 27 பேரில் மூன்று பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டார்கள். பௌசி, பேரியல் அஸ்ரப், அதாவுல்லா ஆகியோர் முழு அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றார். இதன்போது நஜீப் ஏ மஜீத் அடங்களாக மூன்று பேர் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக பதவி வகித்தனர் இப்பாராளுமன்றம் 2010ஆம் ஆண்டு பெப்ரவரி 09ஆம் திகதி கலைக்கப்பட்டது.2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி 225 அங்கத்தவர்களுடன் 144 பேரை பெற்றுக் கொண்டு ஆட்சியமைத்தது. இத்தேர்தலில் விசேடமாக முஸ்லிம் பெண் பிரதிநிதிகள் என்ற பெருமையை பெற்ற இருவரும் தோல்வி அடைந்தனர்இத்தேர்தலில் 15 பேர் வெற்றிபெற்று முஸ்லிம் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் நுழைந்தனர் தேசிய பட்டியல் மூலம் 3 பேர் தெரிவாகினர். இப்பாராளுமன்ற அமைச்சரவையில் பௌசி, அதாவுல்லா, ரிசாட்பதியுத்தீன் ஆகியோர் அமைச்சர்களாகவும் ஹிஸ்புல்லாஹ் பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்படனர். எனினும் அந்த வருடம் நவம்பர் மாதம் மீளமைக்கப்பட்ட அமைச்சரவையில் ரவூப் ஹக்கீம் அமைச்சராக்கப்பட்டார். மேலும் 3 முஸ்லிம் பிரதியமைச்சர்களும்நியமனம் செய்யப்பட்டனர். 2015ம் ஆண்டு ஜனவரி8ஆம் திகதி தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன் அதாவது 2 வருடங்கள் முன்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தேர்தலுக்கு முகம்கொடுத்தார். ஒருங்கிணைந்த பொது அணியின் பொது வேட்பாளராக சிறிலங்கா சுதந்திரக்கட்சி செயலாளர் மைத்திரிபால சிறிசேனே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதோடு அமைச்சரவையில் மாறுதல்கள் செய்து ரணில் விக்கிரம சிங்கவை பிரதமராக்கினார். தொடர்ந்து அதே ஆண்டு ஆகஸ்ட் 17இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பிரதமர் தலைமையிலான ஐ.தே. கட்சி 106 ஆசனங்களையும் ஜனாதிபதி தலைமையிலான ஐ.ம.சு.கட்சி 95 ஆசனங்களையும் பெற்று தேசிய அரசாங்கம் ஒன்றை தாபித்தனர். இதில் 21 முஸ்லிம் பிரதிநிதிகள் பாராளுமன்றம் தெரிவாகினர். அவர்களுள் 6 பேர் தேசிய பட்டியல் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர். 2015இல் அமைச்சரவையில் 5 முஸ்லிம்கள் அமைச்சராக பதவி வகிக்கித்தார்கள். அத்தோடு 3 முஸ்லிம் பிரதி அமைச்சர்களும் இரு முஸ்லிம் இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர். 2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட கோத்தாபாய ராஜபக்ஸ 6924255 வாக்குகளை பெற்று 52.25 வீதமான வாக்குகளை தனதாக்கிக்கொண்டுள்ள நிலையில் 16வது பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. பொதுஜன பெரமுனவின் வருகைற்கு பின் இலங்கை அரசியலில் குறிப்பாக முஸ்லிம் அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் ஏற்படவுள்ள மாற்றத்தையும் பற்றிய ஒரு முழுமையான பார்வையை பிரிதொரு கட்டுரையில் பார்ப்போம். மொத்தமாக பார்க்கின்ற போது முஸ்லிம்கள் தமது விகிதாசாரத்திற்கு அமையவும் சிலபோது அதைவிட அதிக பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் பெற்று வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. விகிதாசார தேர்தல் முறை சிறுபாண்மை மக்களுக்கான வரப்பிரசாதம் என்பதையே இது உணர்ந்துகின்றது. முஸ்லிம்கள் சிறுபாண்மையாக வாழும் நாட்டில் பலம் வாய்ந்த அமைச்சர்களை முஸ்லிம்கள் பெற்றமை உண்மையிலேயே சிறப்பானதொரு அம்சம் என்று குறிப்பிட முடியும். எனவே, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடைபெறவுள்ள 16வது பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்துக்கு ஒரு சவாலான பாராளுமன்றமாகவே இருக்கப்போகின்றது என்பதை அண்மைய அரசியல் நிகழ்வுகளை வைத்து நாம் புரிந்து கொள்ள முடிகின்றது.

## ஓட்டமாவடி பிரதேச சபைக்கு சொந்தமான வடிகாலில் விடப்படும் கழிவு நீரினால் டெங்கு நோய் பரவும் அபாயம்

ஓட்டமாவடி பிரதேச சபையின் எல்லைக்குள் இருக்கும் வடிகால்களில் குறிப்பிட்ட ஒரு சில பொது மக்களினால் விடப்படும் கழிவு நீர் காரணமாக இப்பகுதியில் வசித்து வரும் மக்கள் கடும் சுகாதார அசௌகரியங்களை சந்தித்து வருகின்றார்கள். இது தொடர்பான முறைப்பாடுகள் ஓட்டமாவடி பிரதேச சபைக்கு விடுக்கப்பட்ட போதும் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை சபை எடுத்ததாக தெரியவில்லை. என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடிகாலில் கழிவு நீர் தேங்கியுள்ளதால் நுளம்பு பெருகியுள்ளதுடன் ஒரு வகையான துர்நாற்றமும் வீசி வருகின்றது. இதனால் வடிகால்களை அண்மித்துள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை நாளாந்தம் சந்தித்து வருகின்றார்கள். தற்போது டெங்கு நோயின் பரவல் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பிரதேச சபை[illegible] எடுக்கப்பட வில்லை[illegible] தேசிய நீர் வழங்கள் அதிகார சபை வடிகாலை

## புதிய தவிசாளர் நடவடிக்கை எடுப்பாரா?

அண்மித்த பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பொருத்தி வருகின்றது. இதனால் முன்னதாக வடிகாலுக்குள் கழிவு நீர் விடுவதற்காக போடப்பட்ட குழாய்களை அகற்ற வேண்டிய நிலை இருந்தும் அதற்கான பணிப்புரைகள் தங்களுக்கு வழங்கப்படவில்லை என குழாய்களை பொருத்தி வரும் தேசிய நீர் வழங்கல் அதிகார சபையின் ஊழியர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால் [illegible] நீர் வடிகாலுக்குள் போவத[illegible] புதிய குழாய்களை பொருத்துவதை தங்களால் தடுக்க முடியாது என்றும் இந்த விடயத்தை பிரதேச சபையே கையாள வேண்டும் என தேசிய நீர்வழங்கள் அதிகார சபையின் ஊழியர்கள் குறிப்பிடுகின்றார்கள். வாழைச்சேனை,ஓட்டமாவடி எல்லைப்பிரதேசங்களில் வசிப்பவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே, புதிய தவிசாளர் இப்பிரச்சினைக்கு முறையான தீர்வுதிட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் எனஇப்பகுதி மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org